1409

தொகுதி 6.] 1927ஞ நவம்பர் [பகுதி 10.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1927
MADRAS

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
...நிலயம், சென்னை.

JL
N22 mm
N27.6.10.
186520.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ளு ஜனவரிமீ த்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கோலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற எப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. பிறகு கடற்கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி முதல்பாகம் முடிவுபெற்று இப்பொழுது 2-ம் பாகம் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ளு ஜனவரிமீ த்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணு சேர்த்து ரூ.2—12—) அனுப்பிவிட்டால் அந்தச் சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ளு ஜனவரிமீ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கோலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 1-ம் பாகம்	,,	1	8	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

அதற்குள் எல்லப்பன் அருந்திய சாராயத்தால் அவன் சோர்வு ஒருவாறு நீங்கியதோடு தாராளமாகப் பேசக்கூடிய உற்சாகமும் உண்டாகிவிட்டது. ஆகவே அவன் தன் கரங்களைத் தேய்த்துக்கொண்டு தைரியநாதம் பிள்ளையை நோக்கி,

"அய்யா! நான்படும் கஷ்டம் அற்பம் என்று நீர் கருதலாகாது. நான் என் வாழ்நாளில் தரையிலும் நீரிலும் எத்தனையோ கஷ்டங்களை யனுபவித்திருக்கிறேன். இப்போது எனக்கிருக்கும் துன்பத்தை யளவிட்டுச் சொல்ல முடியாது. அய்யோ கடவுளே! நான் உங்கள் நாட்டிற்கு வந்த பின்புதான் இத்தகைய துன்பம் எனக்கு நேர்ந்தது" என்றான்.

தைரியநாதம் பிள்ளை:—"ஓ கடவுளே! இதென்ன இது. உன் சங்கதியென்ன? நீ புது ஊரில் வந்து உன் கலப்பையைப் பூமியில் செலுத்தினால் இடை யிடையில் ஒரு பாறையில் அது முட்டிக்கொள்வது இயற்கையே. நீ பொறுமையோடு வேலை செய்யவேண்டும். நீ எங்கள் நாட்டிற்கு வந்தவரையில் எங்கள் நன்மையைக் கருதியும் வேலைசெய்ய வேண்டியதே" என்றார்.

எல்லப்பன்:—"கடவுளே! நான் எங்கள் நாட்டிலிருந்து புறப்படும்போதே பிசாசும் என் காலைப் பின்பற்றி வந்ததுபோலும். நான் பேசாமல் எங்கள் நாட்டிலேயே யிருந்திருக்கவேண்டும்" என்றான்.

தைரியநாதர்:—"சரி. இப்போதுனக்குண்டாகி யிருக்கும் துன்பந்தானென்ன? என்ன கெடுதிதான் உனக்கு நேர்ந்தது? நீ எதைப்பற்றி முறையிட்டுக் கொள்கிறாய்?" என்றார்.

எல்லப்பன்:—"ஒவ்வொரு விஷயத்திலுமே எனக்கு வியா

OFFICE OF THE REGISTRAR MADRAS 15 DEC 1927

186520

கூலம். அந்தோ! இந்தச் சனிபிடித்த ஊருக்கு வந்ததே தவறாகி விட்டது. இத்தீவை ஆதியில் சிருஷ்டிக்கும் போதே ஆண்டவன் இதைச் சபித்துவிட்டான். இது கள்ளர், கபடர், போக்கிரிகள் முதலிய துஷ்டர்கள் வசிப்பதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டதாக்கும். நான் இம்மாதிரி கூறுகிறேனென்று என்மேல் தாங்கள் வருத்தப்படலாகாது. என் மனைவியாகூலம் அப்படி யிருக்கிறது" என்றான்.

தைரியநாதம் பிள்ளை புன்னகையோடு, "ஹா ஹா! நேர்த்தியான பிரசங்கம். வேறொருகாலத்தில் நீ யிம்மாதிரி கூறுவதை நான் கேட்டிருந்தால் உடனே தக்க தண்டனை யால் உனக்குப் புத்தி புகட்டியே யிருப்பேன்" என்றார்.

எல்லப்பன்:—"அய்யா! தாங்கள் இச்சமயம் பொறுமை பாராட்டவேண்டும். தாங்கள் செல்வமும் வல்லமை யும் உடையோர். ஆகையால் இரக்கமும் பொறுமையும் தாங்கள் காட்டவேண்டும். என்போல் வெளியூரி லிருந்துவந்து இங்கு துன்பத்தை யனுபவிக்கிறவர் களிடம் தாங்கள் இரக்கம் காட்டவேண்டும். வல் லமையுடையோன், ஒருவருக்குக் கெடுதி செய்யச் சக்தியுடையோன் காட்டும் பொறுமைதான் உண்மை யான பொறுமை. இங்குள்ளவர்களோ ஜலம்வேண்டு மென்றால் உயிரை வாங்கிவிடும் பாஷாணத்திராவ கத்தை யளிப்பார்கள். சோறு கேட்டால் மணலைப் பிசைந்துகொடுப்பார்கள். இப்போது நீங்கள் அளி த்த நேர்த்தியான உணவைப்பற்றிக் கூறுவதாய் நினைக் கவேண்டாம். இங்குள்ள வேலையாட்களோ வேலை க்கு வருவதாய் முன்பணம் வாங்கிக்கொண்டு மறு நாள் வழியில் ஆந்தை கத்திற்று, காக்கை குறுக்கே போயிற்று, நான் அவசகுனமான கனவு கண்டேன்

என்று கூறிவிட்டு வேலைக்கு வராமலே நின்றுவிடுவார்கள். அவர்கள் கையில் மண்வெட்டியைக் கொடுத்து வேலை செய்யச்சொன்னால் அதையொரு கொள்ளிக் கட்டையைத் தொடுவதுபோல் தொடுகிறார்கள்'' என்றான்.

பைரவி கிருஷ்ணப்பன்:—"பாபம்! அவர்களுக்குத் திருப்தி யான கூலியளித்தால் அவர்கள் ஏன் திருப்தியாக வேலைசெய்ய மாட்டார்கள்.?'' என்றான்.

எல்லப்பன் அதற்கு ஏதோ சமாதானம் கூறத் தொடங்கினான். அதற்கிடையில் தைரியநாதம் பிள்ளை "இதையெல்லாம் நான் கேட்கவில்லை. நான் கேட்ட கேள்விக்கு இவை சரியான விடையாகாது. நீ இந்த இடத்தில் இந்நேரத்தில் எப்படி வந்திருக்கிறாய் என்பதைப் பற்றியே நான் உன்னைக் கேட்டேன்'' என்றார்.

எல்லப்பன்:-"அய்யா! தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாகவிரும். நான் கூறுவதைக் கொஞ்சம் கேளும். முழு சங்கதியையும் தங்களுக்குக் கூறுவதுதான் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு காலத்தில் எனக்குக் கடவுள் தயவால் நல்லதிஷ்டம் கிடைத்ததென்றும் அதனால் என் கஷ்டங்களனைத்தும் ஒழிந்து விடுமென்று எண்ணியிருந்தேன்.'' என்றான்.

தைரியநாதர்:—"என்ன அதிஷ்டம் அய்யா? ஏதேனும் கப்பல் சேதமடைந்து அதிலிருக்கும் சாமான்களெல்லாம் கரையில் வந்துசேர்ந்து விடுமென்று கருதினையோ? அப்படியாயின் அதைவிட வெட்கக்கேடான சங்கதி வேறில்லை. உன் நடக்கையைப் பார்த்து மற்ற பேரும் கற்றுக்கொள்வார்களே!'' என்றார்.

எல்லப்பன்:—"அந்தோ! கடவுளறியக் கூறுகிறேன். அத்தகைய எண்ணம் எனக்கு எப்போதுமேயில்லை. உன்

மை யென்ன வென்பதைக் கூறுகிறேன் கேளுங்கள். ஒருநாள் நாங்கள் இருக்கும் வீட்டில் இருந்த அடுப்பு களிலொன்றை யிடித்தெறிந்து விடுவதென்று தீர்மானித்தோம். ஏனெனில் ஒரு வீட்டிற்கு ஒரே அடுப்பு போதுமென்றும் அதற்குமேலிருப்பது அனுவசிய மென்றும் என் தங்கையும் கருதினள். அவ்வாறே நாங்கள் அந்த அடுப்பை யிடிக்கத்தொடங்கினேம். அதன் மேல்பாகத்திலிருந்த மண்ணையெடுத்துவிட்டுக் கீழிருந்த ஒரு பலகைக் கல்லைப் பெயர்த்தெடுத்தோம். ஓ! அப்போது நாங்கள் அங்கு என்னகாண வேண்டும். எதைக்கண்டோம் தெரிகிறதா? ஒரு நீண்ட தகரக் குழாயில் நிறைய பழைய வெள்ளி நாணயங்கள் இருந்தன. அவற்றின் இடை யிடையில் பொன் நாணயங்களுமிருந்தன. அவற்றைக் கண்டதே நானும் என் தங்கையாகிய பாபம்மாளும் இது கடவுள் தயவால் நமக்கு அளிக்கப்பட்டதே யென்று மிக்க ஆனந்தமடைந்தோம். உடனே யிருவரும் யோசித்து இதை யிங்கேயே விட்டுவைக்க வேண்டும். இது சங்கதி பதுமநிதிபோன்ற பெரும் புதையலாக விருக்கும். ஆகையால் இதை யிந்த விடத்தினின்றும் பெயர்க்கலாகாது என்றுகருதி அவ்வாறே தீர்மானித்தோம். அதன்படிக்கே அப்பலகைக் கல்லை முன் இருந்தபடியே மிக்க சாமார்த்திய தந்திரத்தோடு மேலே மூடிவிட்டோம். இன்னும் அதைப்பற்றி மிக்க ஜாக்கிரதையாக விருப்பதற்காக பாபம்மாள் ஒரு பகலில் குறைந்தது இருபது முறைகளுக்குக் குறையாமல் அதைப் போய் அப்படியே யிருக்கிறதா வென்று பார்த்துவிட்டு வருவாள். நானும் அடிக்கடி போய்ப் பார்த்து வருவேன்.'' என்ருன்.

பைரவி கிருஷ்ணப்பன், "பேஷ்! பேஷ்! இது நல்ல வேடிக்கையான சமாசாரமே. நம் வீட்டிலிருக்கும் பொக்கிஷப் பெட்டியை நாமே போய் அடிக்கடி பார்ப்பது நல்ல வேலை. இத்தகைய கதையை நான் எந்த நூலிலும் கண்டதில்லை," என்றான்.

தைரியநாதம் பிள்ளை:—"ஆம். ஆம். நீ மறந்துவிட்டாய், அப்புதையலில் ஒருபாகம் நமது மடத்திற்கு அளிக்க வேண்டுமல்லவா. கப்பற் சேதங்களிலெல்லாம் மடத்திற்குப் பங்களித்தபோது இப்படிக் கடவுள் தயவால் புதையல் கிடைத்தபோது மடத்திற்குப் பங்களிக்க வேண்டாமோ? அதை யிவர் மறக்க மாட்டாரென்றே கருதுகிறேன்." என்றார்.

எல்லப்பன்:—"ஹா! ஹா! சந்தேகமின்றி நமது மடத்தின் தெய்வத்திற்கு அதில் சரியான பாகம் கிடைக்குந்தான். ஆனால் பின்னால் நடந்ததைக் கேட்கவேண்டும். ஒருநாள் நான் அப்புதையலை யெடுத்து எண்ணுவதற்காக அங்கு சென்றேன். ஏனெனில் நான் உலோபியல்ல. அதிலும் நமது மடத்தின் தேவதைக்குக் கொடுக்கவேண்டிய பங்கை நான் அபகரிக்கக் கருதுவேனோ? இல்லையில்லை. ஆகையால் அங்கிருப்பதையெண்ணிப்பார்த்து கடவுளின் பாகத்தை வைக்கவே சென்றேன்.

அய்யோ கடவுளே! நான் அங்கு சென்றபோது என்ன பார்த்தேன் என்று கருதுகிறீர்கள். நீங்கள் அனைவரும் நான் கூறுவதைக் கேளுங்கள். நான் அந்த அறைக்குள் சென்றதும் திடுக்கிட்டுப் பின்னிடைந்தேன். ஏனெனில் அங்கு நான் கண்ட உருவம் அத்தகைய கோரமான உருவம். அது ஒரு மிக்க குட்டையான மனித உருவம். தடித்த உதடுகளும் குழிக்கண்களும் குறுகிய நெற்றியும் அகன்ற

செவிகளும் குறுகிய கழுத்தும் உடைய கோரரூபமாக விருந்தது. நான் இயற்கையாகக் கோழையல்ல. ஆயினும் என் ஜன்மத்தில் காணுத இந்தக் கோரரூபத்தைக் கண்டதே பிரமையடைந்துவிட்டேன். அந்தக் கோர உருவமுடைய ஆள் நாங்கள் அவ்வளவு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொண்டிருந்த அதே புதையலை யெடுத்து அதிலுள்ள நாணயங்களை யெண்ணிக் கொண்டிருந்தது. அந்த உருவத்தையும் அதன் செய்கையையும் கண்டதே என்மனதிற்கு மிக்க கலவர முண்டாய்விட்டது. என்ன செய்வதென்று எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நான் கொஞ்சம் நிதானமாய்ப் பார்க்காவிட்டால் அது ஒரு பேயேயென்று எண்ணிவிட் டிருப்பேன்.

ஆயினும் இப்போது எதற்கும் மிக்க ஜாக்கிரதையோடு நடக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றியது. ஏனெனில் அந்த உருவமே பேயாக வில்லாவிடினும் இந்த விவகாரத்தில் பேய்ச்சம்பந்தம் இருக்கிறதென்று எனக்குத் தோன்றியது. அதன்மேல் நான் மெதுவாய் அவனருகிற் சென்று நீ யார்? இங்கேன் வந்தாய்? என்று கேட்டேன். அவன் வாயைத் திறந்தபோது கடவுளே! அந்த வாய் அகன்றிருந்ததோடு அதில் நாவிருப்பது தோன்றவேயில்லை. அதைக்கண்டதே எனக்கு மிக்க பீதியுண்டாயிற்று. அவன் என்னை யுற்றுநோக்கியபோது அப்போதுதான் வேட்டைக் கவிழ்த்து விடப்பட்ட நாய்போல் தோன்றினன்.

எனக்குண்டான பீதியால் நான்போய் என் தங்கையை யழைத்துக்கொண்டு வரலாமென்று சென்றேன். அவள் பேய் பிசாசு பூதம் எதற்கும் பயப்பட மாட்டாள். நான் கீழிறங்கி என் தங்கையின் அறையை நோக்கிச் சென்றபோது பேய்போல் வீட்டிலிருந்த வேலைக்காரி குறுக்கே வந்து வழிமறித்து இப்போது அங்கு செல்ல

வேண்டாம். அந்தம்மாள் உடையணிந்துகொண் டிருக்கிறார்கள் என்றாள். நான் இரண்டொரு நிமிடங்கள் கழித்து பாபம்மாளை யழைத்துக்கொண்டு துரிதமாய் மேல் அறைக்குச் சென்றேன். இருவரும் உள்ளேசென்று பார்த்தபோது அங்கு மனிதனாவது பேயாவது ஆவேசமாவது ஒன்றுமேயில்லை. பொக்கிஷத்தைப் பார்த்தால் அதையும் காணோம். இரண்டும் அடியோடு மாயமாய் மறைந்து விட்டன'' என்றான்.

அவன் கூறிய அதிசயமான கதையைக் கேட்டதே யாவரும் மிக்க வியப்படைந்து விட்டார்கள். தைரியநாதம் பிள்ளை கிருஷ்ணப்பனை நோக்கி "அது பேயாகவே யிருக்க வேண்டும். அல்லது இவர்கூறிய குறிப்புகளால் சம்பு என்பவனாகவே யிருக்கவேண்டும் என்று தெரிகிறது. அவனாக விருந்தால் பேயினும் அசாத்தியனாகவே யிருக்கவேண்டும்'' என்றார்.

45-வது அத்தியாயம்.

அதன் பிறகு தைரியநாதர் எல்லப்பனை நோக்கி "அந்தக் குள்ளன் எவ்வழி எப்படிச்சென்றான் என்று நீ பார்க்கவில்லையா?'' என்று வினவினார். எல்லப்பன் "இல்லை யென்றுதான் நான் கூறவேண்டும். நானும் என் தங்கையும்எங்களாலானவரை அவன் அந்த வீட்டைவிட்டு எந்த வழியாகப் போய்விட்டிருப்பான் என்று ஆலோசித்துப் பார்த்தும் எங்களால் அறியமுடியவில்லை. ஆனால் நான் முன்கூறிய வேலைக்காரி மட்டும் ஒரு சங்கதி கூறினாள். அதாவது அவன் அங்கிருந்த ஒரு புராதனமான சாளரத்தின் வழியாகப் பறந்து ஒருபறக்கும் புரவிமேலேறிச் சென்றான் என்று கூறினாள். நான் என்னால் கூடியவரை யோசித்

ததில் பறக்கும் புரவியென்று கதைகளில் வாசித்திருக்கிறோமேயன்றி யாரும் கண்ணுற் கண்டதில்லை. ஆகையால் அம்மொழிகளைக் காதில் கேட்காதது போலவே கருதி விட்டேன்.

புனிதவதி தங்கள் சுற்றத்தாளாகிய நாகம்மாளுடைய விஷயங்களை நன்றாயறிவதற்காக "இந்த விஷயங்களெல்லாம் நமது எல்லப்பர் இங்கு இந்த அகாலத்தில் வந்து சேரும்படி எப்படிச் செய்தன?" என்றாள்.

பைரவி கிருஷ்ணப்பன் "காலமோ அகாலமோ, இங்கு நீங்கள் வந்து சேர்ந்த வரையில் எல்லாம் நல்லவேளையே யாகும். உண்மையில், அம்மா புனிதவதி! நமது நண்பராகிய எல்லப்பப்பிள்ளைக்கு நான் இங்குவரும்படி ஆலோசனை கூறினேன். அது எப்படி நேர்ந்ததெனின், நான் தற்செயலாக ஒருநாள் இவர்கள் வீட்டிற்குச் செல்ல நேர்ந்தது. அப்போதுதான் இவருக்கு மேற்கண்ட ஆபத்து நேர்ந்தது. அதைக்கண்ட நான் 'நீர் நடந்த விஷயத்தைப் பற்றி வருத்தப்பட்டுக்கொண் டிருப்பதில் பயனில்லை. துன்பமோ ஆபத்தோ நேரிடும்போதுதான் அறிவாளி தன் தைரியத்தை யுபயோகித்துப் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளவேண்டும். அப்படிப்பட்டவன் தன் ஆபத்தினின்றும் பூரணமாகத் தப்பித்துக் கொள்ளாவிடினும் பெரும்பாலும் அதன் கஷ்டங்களைக் குறைத்துக் கொள்வான். நீ பேசாமல் என்கூட வா. தீவின் மறுபக்கமிருக்கும் என் நண்பரிடம் செல்வோம். நீ வீணே இங்கு நடந்த விஷயத்தைப் பற்றித் துன்புற்றுக்கொண் டிருப்பதில் பயனில்லை' என்று கூறினேன். இவர் குதிரைமேல் ஏறிவரப் பிரியமடைந்தார். அப்புறம் நான் என்ன செய்வது?" என்பதற்குள்,

எல்லப்பன்:—"ஆகா! குதிரைகள்—என் குரங்குகள் என

லாம். இத்தீவிலுள்ள மற்ற பிராணிகளைப் போல் அவைகளும் மிக்க அக்கிரமமாக நடப்பவைகளே. அவற்றை நம்பிச் செல்வதைவிட நமக்குக் காலால் நடக்கக் கஷ்டமாயின் தலையால் நடந்தாவது செல்ல லாம்'' என்றான்.

கிருஷ்ணப்பன்:—“அதன்மேல் நான் ஒரு படகில் இவரை யேற்றிக்கொண்டு வந்தேன். நாங்கள் நாகம்மாள் வீட் டருகில் வந்து சேர்ந்தோம்....'' என்றார்.

அதற்குள் எல்லப்பன்:—“ஆம். ஆம். இவர் என்னைப் பட கில் ஏற்றிக்கொண்டு வந்து குடாக்கடலின் முனையில் படகைக் கவிழ்த்துவிட்டார். எப்படியோ நான் தப்பி யது தம்பிரான் புண்ணியமாய் விட்டது. பிறகு படகை நிமிர்த்தி வேகமாய் அடிக்கும் காற்றில் பாய் மரத்தைக் கட்டிவிட்டுத் தன் பிடிலை யெடுத்துக் கொண்டு பாடத்தொடங்கினர்'' என்றான்.

தைரியநாதம் பிள்ளை:—“என்ன! அப்படிக் காற்றடிக்கை யிலா பாய்மரத்தைக் கட்டிவிடுவது? அது கெட்ட பழக்கமாயிற்றே'' என்றார்.

எல்லப்பன்:—“அது அப்படித்தான் முடிந்தது. ஏனெனில் மறுமுறை வந்த காற்று படகை யடியோடு கவிழ்த்து விட கிருஷ்ணப்பருடைய பிடில்தவிர மற்றயாவும் கட லுக்கிரையாயின. இவர் பாபம் நீர் நாய்போல் நீந்திக் கொண்டு கரைக்குவந்து சேர்ந்தார். நானோ ஒரு துடுப் பின் உதவியைக் கொண்டு சொல்லொணுக் கஷ்டத் தோடு உயிர்தப்பிக் கரைவந்து சேர்ந்தேன். இப் போது இங்கே சுகமாய் வந்து சேர்ந்தோம். கடவுள் தயவால் நீங்கள் ஆகாரத்தோடு இங்குவந்து சேரா திருந்தால். எங்கள்கதி யாண்டவனே யறியவேண்டும்.

இதுதான் எங்கள் அதிசயமும் துக்ககரமுமான சரித்திரம்" என்றான்.

புனிதவதி:—"நாங்கள் கடற்கரை வழியே வந்துகொண்டிருக்கையில் நீங்கள் ஒரு குறையுமில்லாது சந்தோஷமாக விருப்பவர்கள்போல் சத்தம் செய்துகொண்டிருந்தீர்களே. எங்களுக்கு நன்றாய் உங்கள் சந்தோஷ கோஷம் கேட்டதே" என்றாள்.

எல்லப்பன்:—"அம்மா! நீங்கள் நமது கிருஷ்ணப்பருடைய பிடீல் சங்கீதத்தைக் கேட்டிருப்பீர்கள். இவர்தான் சங்கீதத்தில் பிரசித்தி பெற்றவர் என்பது யாவருமறிந்ததே. இவர் கலியாணப்பந்தலில் வாசித்தாலும் சரி, மயானத்தில் சவச்சடங்கு நடக்கும்போது வாசித்தாலும் சரி, கேட்போர்க்கு ஆனந்தமாகவே யிருக்கும். ஆயினும் இச்சமயம் நாங்கள் பட்டினியால் சாவது போலிருக்கும் சமயத்தில் இவர் சந்தோஷப் பாட்டுப் பாடத்தொடங்கியது என் மனதிற்குப் பெரியவேதனையாகவே யிருந்தது" என்றான்.

கிருஷ்ணப்பன்:—"என்" நாம் விசனப்பட்டுக் கொண்டிருப்பதாலேயே படகு சரியாய்ச் சென்றுவிடாதென்று நான் அப்போதே கூறினேனல்லவா? நான் என் பிடீலின் உதவியைக் கொண்டு என்னாலானவரையில் உங்கள் துயரத்தை நீக்க முயன்றேன். படகு சரியாகப் போகாவிட்டால் அது என் தப்பிதமல்ல, என் பிடீலின் தப்பிதமுமல்ல. நாங்கள் அதற்கு என்ன செய்வோம்? பிரசித்திபெற்ற ஒரு கிரந்தகர்த்தா கூறிய ஒரு கதையைக் கூறுகிறேன் கேளுங்கள்......" என்றதே,

தைரியநாதம்பிள்ளை:—"உம்முடைய புராதனக் கதைகள் ஒன்றும் வேண்டாம்; அவற்றை நான் கேட்கமாட்

டேன். அப் பழைய கதை வேண்டாம். நீங்கள் நாகம் மாளிடம் சென்றபோது அவள் என்ன கூறினாள்? அங்கு என்ன சங்கதி நடந்தது?" என்றார்.

எல்லப்பன்:—"அங்கொரு இடியே விழுந்தது. அவள் எங்கள் வார்த்தையைக் கேட்க மறுத்துவிட்டார்கள். எங்களைப் பார்க்கவே மறுத்துவிட்டாள். நமது கிருஷ்ணப்பர்தாம் அவளிடம் பலகேள்விகளைக் கேட்க வெண்ணி யிருந்தார். முக்கியமாய், தைரியநாதரே! உமது குடும்பவிவகாரங்களைப் பற்றியே கேட்கவெண்ணினர். பாபம் நமது நண்பரை யம்மாது தொந்தரை செய்து விட்டாள். ஏனெனில் இவரிடமிருந்து அறிய வேண்டிய யாவற்றையும் கிரகித்துக்கொண்டதே காலி பிப்பாயைப்போல் இவரை யெங்கே தூக்கிக் கடலில் எறிந்து விடுவாளோ வென்று எனக்குப் பீதியுண்டாய் விட்டது" என்றான்.

தைரியநாதன்:—"உன் சங்கதியைப்பற்றியோ?" என்றார்.

எல்லப்பன்:—"என் சங்கதியைப் பற்றிக் கேட்க மறுத்து விட்டாள். நான்கூறும் ஒரு வார்த்தையைக் கூடக் கேட்கமாட்டே னென்றாள். இத்தகைய சூனியக்காரிகளிடமும் பேய்களிடமும் செல்கிறவர்கள் சங்கதி இப்படித்தான் முடியும்" என்றான்.

இதுகாறும் யாவற்றையும் பேசாமற் கேட்டுக்கொண்டிருந்த மீனாள், எல்லப்பனை நோக்கி, தனக்குச் சமீபத்தில் நன்மைசெய்த தன் சுற்றத்தாளாகிய நாகம்மாளைப் பற்றி அவன் கூறும் தூஷண மொழிகளைக் கேட்க விருப்பமில்லாமல் அதைத்தடுக்க வெண்ணியவள்போல், "நீர் இத்தகைய விஷயங்களில் ஆலோசனை கேட்க நாகம்மாளிடம் சென்றிருக்கலாகாது. அத்தகைய வித்தைகள் மற்றவர்களின் நன்மைக்காகச் சரியாக உபயோகப் படுத்தப்படா

விட்டால், அவை நெடுநாள் ஒருவரிடம் நிலைத்திருக்க மாட்டாவென்று இத்தீவிலுள்ள சிறு குழந்தைக்கும் தெரியுமே'' என்றாள்.

எல்லப்பன்:—“அம்மா குழந்தாய்! நீ குறிப்பிட்ட விஷயத்திற்காக உனக்கு வந்தனம் அளிக்கிறேன். நீயிவ்வளவு புத்திசாலியாக இருப்பதை யறிய நான் உண்மையில் மிக்க சந்தோஷ மடைகிறேன். அந்தப் பொக்கிஷத்தைப்பற்றி எனக்கு அவசியமேயில்லை. நான் அது கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கவில்லை யாதலின் இப்போது அது போய்விட்டதைப் பற்றி எனக்கு விசனமில்லை. அவ்வீட்டிலுள்ள என் தங்கையும் மற்றவர்களும் எப்படி எண்ணிக் கொண்டாலும் சரியே'' என்றான்.

பைரவி கிருஷ்ணப்பனுக்கு அவன்மேல் கொஞ்சம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமுதித்தது. ஏனெனில் தான் படகைக் கவிழ்த்துவிட்ட சங்கதியையவன் வெளியில் கூறித் தனக்கு அவமானம் உண்டாக்கியதோடு தன் வீணையைப் பற்றியும் அலட்சியமாய்க் கூறினன் என்று அவனுக்கு எல்லப்பன்மேல் மனவருத்தம் உண்டாகியிருந்தது.

ஆகையால் அவன், “பாபம் நமது எல்லப்பர் புதையலை யாருக்கும் கூறாமல் மிக்க இரகசியமாக வைத்திருந்தார். தன் குருவுக்குச் சேரவேண்டிய பாகத்தையும் கொடாமல் மறைத்து வைத்துக்கொண்டிருந்தார் - இப்போது அப்பொக்கிஷம் காற்றாகப் பறந்துபோய் விட்டது. ஆகையால் அப்பொக்கிஷத்தை யினித் துரும்பாக நினைக்கவேண்டியதே. ஆனால் இவருடைய குரு அக்குள்ளன் கதையையெவ்வளவு சீக்கிரத்தில் நம்புவாரோ அதுதான்தெரியாது. நானும் அதை நம்பவில்லை'' என்று தைரியநாதரை நோக்

இக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கூறினன். அதன்பிறகு "நாகம்மாளும் இவர் கூறிய குள்ளன் கதையை நம்பவில்லைபோ லிருக்கிறது; அதனுற்றுன் அவள் எங்களை முகக் கடுப்போடு நடத்தினள். அம்மாது அத்தகைய ஆச்சரிய மான கதையை நம்பவில்லைபோலும். நமது நண்பராகிய எல்லப்பர் அப்புதையலை வேறு எங்கோ மறைத்துவிட்டு அக்குள்ளன் சங்கதியைப் பொய்க்கதையாய்க் கட்டிவிட்டா ரென்று நாகம்மாள் நினைக்கிருள் என்று புலப்படுகிறது. என்வரையில் நானே நேராக அவனைக் கண்டாலன்றி அத் தகைய ஒரு குள்ளன் உலகிலிருக்கிருனென்று நான் நம் பவேமாட்டேன்" என்றுன்.

எல்லப்பன் உடனே ஆவேசம் வந்தவன்போல் "ஓ! கடவுளே! அப்படியாயின் இதோ இந்த விநாடியிலேயே பார், ஏனெனில் அதோ அவன் இருக்கிருன்" என்று ஆவேசம் வந்தவன்போல் துள்ளியெழுந்து ஒருபக்கம் கரத்தைச் சுட்டிக்காட்டினன். எல்லாருடைய கண்களும் எல்லப்பன் காட்டிய திக்கில் நாட்டப்பட்டன. அங்கு குள் ளனுகிய சம்புவின் கோரரூபம் நின்றுகொண் டிருந்தது. அவன் ஒருவர்க்கும் தெரியாமலே அவர்கள் சம்பாஷித்துக் கொண் டிருக்கையிலேயே அங்குவந்து நின்றுன்.

அவன் அப்படித் திடீலேன்று, அதிலும் அவனைப் பற்றி அத்தகைய அதிசயமான சங்கதியைக் கேட்ட மறுவி நாடியே அங்குவந்து நின்றதால் அவனைப்பார்த்து வழக் கப்பட்ட தைரியநாதர் கூட திடுக்கிட்டுவிட்டார். ஆகார விஷயத்தைப்பற்றி அவன் நாகம்மாளிடம் கூறியதாலேயே தாங்கள் அந்த அகாலத்தில் வீட்டைவிட்டு வெளிவர வேண்டியதாயிற்று. அதனல் தைரியநாதருக்கு அவன் மேல் கோபமே. அதனல் அவனைக்கண்டதே "அடே! இங்கு ஏன் வந்து நிற்கிருய்?" என்று அதட்டிக் கேட்டார்.

சம்பு என்ற குள்ளன் ஒருகடிதத்தை யவரிடமளித்துவிட்டு அன்னியபாஷையில் என்னவோ ஒருவார்த்தை கூறினன். தைரியநாதர் கடிதத்தை வாங்கிக்கொண்டு குள்ளனை நோக்கி "அடே! இந்தவார்த்தையை வடநாட்டில் பொறுக்கிக்கொண்டாயோ?" என்று கேட்டார். அவன் ஆம் என்று தலையசைத்துவிட்டு அக்கடிதத்தை வாசியுங்கள் என்று குறிப்பாய் அதைச் சுட்டிக்காட்டினன்.

தைரியநாதர் "அது இந்தத்தீயின் வெளிச்சத்தில் எளிதில் ஆகிறகாரியமல்ல. ஆயினும் இதில் மீனளைப்பற்றிய சமாசாரம் அடங்கி யிருக்கலாகும். ஆகையால் இதை யெப்படியேனும் வாசிக்க முயலவேண்டும்" என்றார்.

புனிதவதி "அப்பா! நான் வாசித்துக் காட்டுகிறேனே" என்றாள். தைரியநாதர் "அம்மா! நாகம்மாள் எழுதிய கடிதத்தை, அக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களேதான் வாசிக்கவேண்டும். நீ இந்தச் சம்புவுக்குக் கொஞ்சம் பிராந்தி யூற்றிக்கொடு; உண்மையில் இவன் எனது நேர்த்தியான சாராயத்தையும் உணவுப்பொருள்களையும் கடலில் எறியும்போது என்னைக் கேலியாய்ப் பார்த்தமாதிரியை நினைக்கும்போது நான் உபசரிப்பதற்குப் பாத்திரவான் அல்லவென்றே கருதவேண்டும்" என்று கூறிவிட்டுத் தம் கண்ணாடியை யெடுத்துத் துடைத்து மூக்கில் மாட்டிக்கொண்டு நாகம்மாளின் கடிதத்தைப் படித்துப் பார்க்கத்தொடங்கினர்.

பைரவி கிருஷ்ணப்பன் எல்லப்பனை நோக்கி "நண்பரே! இக்குள்ளனுக்கு நீர் சாராயக் கிண்ணத்தை யுமது கரத்தால் அளிக்கிறீரா? அல்லது உபசாரமாவது செய்கிறீரா?" என்று வினவினன்.

எல்லப்பன் "அய்யா! நான் இவனிடம் பேசவுமாட்டேன், இவனைத் தீண்டவுமாட்டேன், இவனருகிற் செல்லவு

மாட்டேன். என் வீட்டிலிருந்து இவன் எடுத்துச்சென்ற பணத்தையென்ன செய்தான் என்று மட்டும் இவனைக் கேளும்'' என்றான்.

சம்பு அவன் கூறியதன் கருத்தை யறிந்துகொண்டு கிருஷ்ணப்பனை நோக்கித் தன் வாயை யகலத் திறந்து ஒரு விரலால் தன் வாயைச் சுட்டிக் காட்டினான். எல்லப்பன் "சே, இவன் அப்பணத்தை விழுங்கி விட்டிருந்தால் அதைப் பற்றி இனிப் பேசுவதில் பயனில்லை; ஆனால் அது உலர்ந்த சர்மத்தைப்போல் அவன் தொண்டையில் விக்கிக்கொள்ளு மென்று நம்புகிறேன். இவன் பிச்சிமலை நாகம்மாளின் வேலைக்காரன். பேஷ் "நல்ல எஜமானி - எஜமானிக்குத் தகுந்த வேலைக்காரன்! ஆனால் இவ்வூரில் களவும் சூனிய வித்தையும் தண்டிக்கப்படாமற் போவதாயின் நான் வேறு ஊரைப் பார்த்துக்கொள்ளவேண்டியதே. நான் இருந்த வூரில் கள்ளர்களிடமிருந்தும் சூனியக்காரரிடமிருந்தும் இராஜாங்கம் எங்களைக் காப்பாற்றியது'' என்றான்.

அச்சமயம் தைரியநாதம் பிள்ளை யங்கேயே யிருந்தால் எல்லப்பன் அவ்வளவுதூரம் நாகம்மாள்மேல் குறை கூறி யிருக்கமாட்டான். தைரியநாதர் அச்சமயம் கிருஷ்ணப் பிள்ளையை யறையின் மற்றொரு மூலைக்கு அழைத்துப் போய் பேசிக்கொண்டிருந்தார். இருவரும் எட்ட ஒரு மூலையிற் சென்றதே தைரியநாதர் கிருஷ்ணப்பனை நோக்கி, "நண்பரே! இப்போது கூறும்; நீர் என்ன காரணமாக இந்த விடத்திற்கு வந்தீர்? வீணாக எல்லப்பனோடு படகில் ஏறிக்கொண்டு வருவதற்காக மட்டுமே வந்திருக்கமாட்டீர் என்று தெரியும்'' என்றார்.

கிருஷ்ணப்பன்:—"நீர் உண்மையை யறியவேண்டுமாயின் நான் கூறவேண்டியதே. உண்மையைக் கூறுகிறேன்.

உமது குடும்ப விஷயத்தைப்பற்றி நாகம்மாளைக் கேட்பதற்காகவே நான் இங்கு வந்தேன்'' என்றான்.

தைரியநாதர் வியப்படைந்து "என்ன? குடும்ப விஷயமா? குடும்ப விஷயத்தில் எதைப்பற்றி?'' என்று ஆவலோடு கேட்டார்.

கிருஷ்ணப்பன்:-"தங்கள் புத்திரியாகிய மீனாளுடைய தேக சுகத்தைப்பற்றி யறிவதற்காகவே. அது விஷயமாய்த் தாங்கள் நாகம்மாளுக்கு ஆள் அனுப்பியபோது அவள் வர மறுத்து விட்டாள் என்ற சங்கதியை நான் கேள்விப்பட்டேன். நான் உமது வீட்டில் பன்முறை யாதரிக்கப்பட்டிருக்கிறேன். பன்முறை உமது புத்திரிகளால் உபசரிக்கப்பட்டு நல்லுணவு அருந்தியிருக்கிறேன். ஆகையால் மீனாள் தேகசுகமற்றிருக்கிறாள் என்பதைக் கேட்டதுமுதல் நான் உண்ணும் உணவு எனக்குத் திருப்தியாயில்லை. நித்திரை பிடிக்கவில்லை. அதாவது எனக்கு ஒருவிதத் துயரமாகவே யிருந்தது. நாகம்மாளுக்குச் சங்கீதத்தின்மேல் பிரியமுண்டு. ஆகையால் அவள் என் விஷயத்தில் கொஞ்சம் பொறுமை காட்டுவாள் என்று எனக்குத் தோன்றிய படியால் நமது நண்பரின் புத்திரிக்கு நம்மாலான உதவியைச் செய்வோமென்று எண்ணியே இங்கு வந்தேன்'' என்றான்.

தைரியநாதர் அவன் கரங்களைப்பற்றிக் குலுக்கி "நீர் செய்ய முயன்றது மிக்க அன்பான காரியம். நீர் எப்போதுமே இரக்கமும் அன்பும் நிறைந்த மனமுடையவரென்று நான் அறிவேன்; ஆம் எனக்குத்தெரியும். நான் கூறுவது உண்மையாதலின் நீர் யதற்காக நாணமடையாதீர் நாகம்மாளிடமிருந்து உமக்கு எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லையென்றே நம்புகிறேன்'' என்று உண்மை யறிந்தவர் போல் கூறினார்.

கிருஷ்ணப்பிள்ளை:—"ஒரு பயனுமுண்டாகவில்லை. ஆனால் அம்மாது மீனாளின் சுகத்தைப்பற்றி மட்டும் என்னை மிக்க நெருக்கமாக விசாரித்தாள். நான் மீனாளை யன்று கண்டபோது அவள் அசௌக்கியமாக விருக்கிறாளென்று அவளுடைய முகக்குறியால் அறிந்ததையும் பிறகு புனிதவதி யவள் தேகசுகத்தைக் கூறிய சங்கதிகளையும், யாவும் எனக்குத் தெரிந்தவரையில் சவிஸ்தாரமாகக்கூறினேன். அதாவது மீனாளுக்குக் காலில் காயம்பட்டு வருந்திக்கொண் டிருந்தாளென்பதைக் கூட இயம்பினேன்" என்றான்.

தைரியநாதர்:—அவைமட்டுமல்ல. இன்னும் அதிகமான சங்கதியே கூறியிருக்கலாம். ஏனெனில் இதோ மீனாளுக்குக் காலில் காயம்பட்டிருக்கிறதாக நீர் கூறிய சங்கதி யெனக்கு இதுகாறும் தெரியாது.

கிருஷ்ணப்பன்:—அப்படிப் பிரமாத மொன்றுமில்லை. சொல்பகாயம், ஏதோ கீறிக்கொண்டது அல்லது உராய்ந்துகொண்டதுபோலும் நான் மட்டும் கொஞ்சம் பீதியடைந்துவிட்டேன். ஒரு சமயம் நாய் கடித்துவிட்டதோ, அல்லது ஏதேனும் விஷ ஜெந்து தீண்டிவிட்டதோ என்று நான் பயமடைந்து விட்டேன். யாவும் நாகம்மாளுக்குக் கூறினேன்.

தைரிய:—நீ யவ்வளவு கூறியதற்கு நாகம்மாள் என்ன பதில் இயம்பினாள்?

கிருஷ்:—அவள் "நீ யுன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ. இந்த விஷயத்தின் முடிவு குறுக்குத் தீவில் நடக்கும் கேளிக்கையில் தெரியும் என்றாள். இந்த எல்லப்பனுக்கும் அவ்வாறே விடையளித்தாள். எங்கள் கஷ்டத்திற்காக நாங்களிருவரும் அடைந்த பலன் இம்மட்டே" என்றான்.

46-வது அத்தியாயம்.

பைரவி கிருஷ்ணப்பன் கூறிய யாவும் கேட்ட தைரியநாதர் தம்மிடம் சம்புவாலளிக்கப்பட்ட கடிதத்தை யுற்றுநோக்கி ஒரு நிமிடம் சிந்தித்துப் பிறகு கிருஷ்ணப்பனை நோக்கி,

"நண்பனே! இது மிக்க வியப்பாகவே தெரிகிறது. என் சுற்றத்தாளாகிய நாகம்மாள் நான் என் புத்திரிகளை யிட்டுக்கொண்டு குறுக்குத் தீவு கேளிக்கைக்குச் செல்ல வேண்டு மென்று வற்புறுத்துகிறாள். அந்த விஷயம் அவள் மனதில் அதிகமாக உறுத்துகிறது என்று தெரிகிறது. இக்கடிதத்தில் அவள் கூறுவதை யறிந்தால் யாவரும் அவளே அச்சந்தையில் தலைமை வகிக்கப் போகிறாள் என்று கருதுவார்கள். ஆனால் உண்மையில் இவள் அங்கு வாங்கப்போவதேனும் விற்கப்போவதேனும் ஒன்றுமே யில்லை. சரி கடைசியில் நீ எப்படி யவளிடம் சென்றாயோ? அவ்வாறே திரும்பிவந்து படகைக் கவிழ்த்தாயோ?" என்று கேட்டார்.

கிருஷ்:—"நான் என்ன செய்வது? என்னாலொரு குற்றமு மில்லை. நான் அந்தச் சிறுவனைச் சுங்கானில் உட்கார வைத்தேன். திடீலென்று வேகமாய்க் காற்றடித்த போது நான் பிடீல் வாசித்துக்கொண் டிருந்தேன். அச்சமயம் ஏககாலத்தில் நான் பிடீலையும் வாசித்துக் கொண்டு அப்பையனுக்கும் எப்படி உதவி செய்வது? கடைசியில் யாவும் நன்றாகவே முடிந்தது. இச்சத்தத் தீவார்களில் எவரும் உப்புக் கடலால் துன்பமடைந் தது கிடையாது. நாங்கள் கடலில் விழுந்த இடம் ஒரு புருஷ உயரத்திற்கு அதிகமான ஆழமாகவே யிருந்தது. ஆயினும் நாங்கள் கடவுள் தயவால் எப்

படியோ தப்பித்துக்கொண்டு கரைசேர்ந்து இதோ பழைய நண்பராகிய உங்களைக்கண்டு சந்தோஷமடைந்திருக்கிறோம். இப்போது இரவு நேரமாய் விட்டது. இங்கு நித்திரை செய்ய உள்ளறையோ கிடையாது. இங்கு அதிகமாகச் செம்படவர் தங்கியிருந்ததால் குடிசையில் மீன் நாற்றமே யதிகமாக வடிக்கிறது. நமது ஆட்கள் தங்களிடமிருக்கும் துணிகளின் உதவியைக் கொண்டு ஒருவாறு சயனித்துக் கொள்ளலாகும். நாம் ஒவ்வொரு கிண்ணம் சாராயம் அருந்துவோம். பிறகு என் உதவிவேண்டுமாயின் உங்களுக்கு நித்திரை வரக் கூடிய இனிய கீதங்களைப் பாடுகிறேன்...." என்றான்.

தைரிய:—ஒரு கிண்ணமல்ல. வேண்டுமாயின் இரண்டிரண்டு கிண்ணம் சாராயம் அளிக்கிறேன். ஆனால் உன் சங்கீதம் மட்டும் ஒன்றுகூட வேண்டாம் என்றார். இந்த ஏற்பாடு தைரியநாதம் பிள்ளையின் மனதிற்குத் திருப்தியாய் முடிவு செய்யப்பட்டது. அதன்மேல் அனைவரும் அங்கிருந்த இட வசதிக்குத் தக்கமாதிரி சயனித்து நித்திரை செய்தார்கள். மறுநாட் காலை அவரவர்கள் தங்கள் தங்கள் வாச ஸ்தலத்திற்குப் புறப்பட்டார்கள். கிருஷ்ணப்பன் தான் தைரியநாதம் பிள்ளையின் குடும்பத்தோடு குறுக்குத் தீவு சந்தைக்கு வருவதாய் முன்னமே கூறியபடி அவர்கள் கூடச் சென்றான்.

*　　*　　*　　*

இப்போது நாம் சத்தத் தீவைவிட்டு ஆரல் தீவில் நடக்கும் சம்பவங்களைக் கூறவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாக விருக்கிறது. ஆரல் தீவில் இராஜமாளிகை என்ற ஒரு மாளிகை யுண்டு. அது ஒரு

பாழடைந்த புராதனக் கட்டிடம். அம்மாளிகையின் மற்ற பாகங்கள் கிலமாய்ப்போயிருந்தாலும் ஓர் பாகம் மட்டும் நன்றாகவே யிருந்தது. அதனருகில் பூர்வீகத்தி லிருந்த ஒரு குருவின் மாளிகையும் கிலமாகவிருந்தது.

அந்த இராஜமாளிகையின் சதுரத்தில் மூன்று பக்கங் கள் கிலமின்றியே யிருந்தன. அது பூர்வீகத்தில் நாட்டி லிருந்த தலைவர்கள் இராஜ குமாரர்கள் முதலியவர்கள் வசித்திருந்த இடம். அது ஒரு அகன்ற கட்டிடம். அதில் விசாலமான கூடமும் பல அறைகளும் உண்டு. கட்டிடமே மிக்க அழகான வேலைப்பாடுடையது. அதிலிருந்த பெரிய கூடத்தில் கப்பற் கொள்ளைக்காரனாகிய குலசேகரன் தன் கரங்களைக் கட்டிக்கொண்டு கீழே பார்த்த பார்வையோடு உலவிக்கொண்டிருந்தான். அந்த இடம் சாதாரணமாக ஜனங்கள் நெருங்காத ஏகாந்த ஸ்தலமாகையாலேயே குல சேகரன் அங்கு வந்திருக்கவேண்டும். அவன் அணிந் திருந்த உடை சத்தத்தீவில் இருக்கும்போது அவன் அணிந்துகொண்டிருந்த உடைகளைப்போ லில்லை. இரண் டிற்கும் மிக்க வித்தியாசமிருந்தது. முன்பு சாதாரண மான உடைகளையே யணிந்துகொண்டிருந்தான். இப் போது வெள்ளிச்சரிகைப் பட்டைகள் வைத்துத் தைக்கப் பட்ட பட்டுக் காற்சட்டையும், உயர்ந்த பட்டில் ஓரம் முழு மையும் சரிகையால் வேலை செய்யப்பட்ட சட்டையும், நீர் நாயின் சர்மத்தால் செய்யப்பட்ட விலை மதிப்புள்ள தொப் பியும் அத்தொப்பியில் அந்நாட்டு ஆசாரம்போல் பெரிய மனிதர் வகுப்பைச் சேர்ந்தவன் என்பதைக் குறிக்கும் ஒரு இறகும் அணிந்துகொண்டிருந்தான்.

குலசேகரனுடைய வெளித்தோற்றத்திற்கும் உள்ளே யிருந்த அவனுடைய மன நிலைமைக்கும் மிக்க வித்தியாச மிருந்தது. அவன் முகம் மிக்க வாட்டமடைந்திருந்தது.

186520.

அவனுக்குள் எள்ளளவாவது நிம்மதியேனும் சந்தோஷமேனும் கிடையாது. சொல்லொணாக் கலவரமும் திகிலும் பீதியுமே அவன் மனதில் குடிகொண்டிருந்தன. ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போதே, இது நல்லது, நமக்கு நல்ல பலனையும் கௌரவத்தையும் அளிக்கத்தக்கது; அல்லது, இது தீய நடக்கை; இதனால் நமக்கு என்றைக்கிருந்தாலும் துன்பமும் ஆபத்தும் அகௌரவமுமே கிடைக்கும் என்பது உணர்கிறான்.

ஒருவன் வேணுமென்றே மனதார ஒரு தீய காரியத்தைச் செய்யினும் அதே வினாடி அம்மனதிற்குள்ளாகவே ஒன்றிருந்து அது தீய நடக்கை, உனக்குத் துன்பமே வரும் என்று திட்டமாய்க் கூறி மறைந்துவிடுகிறது. அதுதான் சாக்ஷி. அதற்குச் சம்மதமான காரியங்களைமட்டுமே நாம் செய்யின் ஒருபோதும் பாபத்திற்காவது துன்பத்திற்காவது உள்ளாகமாட்டோம்.

இராஜமாளிகையென்ற அப்புராதனக் கட்டிடத்தில் குலசேகரன் உலவிக்கொண்டேயிருக்கையில் இன்னொரு வாலிபன் அங்கு வந்தான். அவன் மெலிந்த உருவமுடையவன். ஆனால் அவன் தன் உடையைமட்டும் மிக்க அக்கரையோடு ஒழுங்காய் அமைத்துக்கொண்டிருக்கிறான் என்பது தெரிகிறது. அவனுடைய நடை அக்காலத்திலிருந்த டம்பாகாரமான வாலிபர்களின் பெருமையான நடையாகவேயிருந்தது. அவன் முகத்தில் விசனமற்ற சந்தோஷத்தோடு ஒருவரையும் மதிக்காதமாதிரியாகவும் நடந்து அங்கிருந்த படிகளிலேறிக் கூட்டத்தில் பிரவேசித்துக் குலசேகரன் முன் சென்றான். குலசேகரன் அவனை நோக்கித் தலையைமட்டு மசைத்துவிட்டுத் தன் தலையணியை யின்னும் புருவம்வரை மறையும்படி முன்தள்ளி மூடிக்கொண்டு பழையபடி அதிருப்தியோடு உலவத்தொடங்கினான்.

புதிதாய் வந்தவன் குலசேகரனுக்குப் பதிலுக்கு வந்தன மளித்துவிட்டுப் பூவேலைசெய்த அழகிய பொடிடப்பியைத் திறந்து ஆடம்பரத்தோடு ஒரு சிட்டிக்கை பொடியெடுத்துப் போட்டுக்கொண்டு உலவிக்கொண்டிருக்கும் குலசேகரனுக்கும் ஒரு சிட்டிக்கை நீட்டினான். குலசேகரன் கடுகடுப்போடு அதை மறுத்துவிட்டதைக் கண்டு டப்பியைச் சேபியில் வைத்துக்கொண்டு மார்பின்மேல் கரங்களைக் கட்டிக்கொண்டு தனியே யுலவிக்கொண்டிருக்கும் குலசேகரன் நடையை யுற்றுநோக்கிக்கொண் டிருந்தான்.

அம்மனிதன், இன்னும் தன்னை யப்படி நோக்கிக்கொண்டிருப்பதை விரும்பாதவன் போல் தட்டென்று அவன் எதிரில் நின்று எடுத்ததே "ஒரு அரைமணிநேரம் என்னைத் தனியே விட்டுவைத்துத் தொலைக்க லாகாதா? அடசனியனே! என்னிடம் உனக்கென்ன கவையிருக்கிறது?" என்று குலசேகரன் உறுமினான்.

வந்தவன், அசட்டையாகவே "ஆனவரையில் நீயே முதலில் பேசியதற்காகச் சந்தோஷமடைகிறேன். நீ உண்மையில் குலசேகரன்றானா அல்லது குலசேகரனுடைய ஆவேசமா என்பதை அறிந்துதீரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். ஆவேசங்கள் தாமாக முதலில் பேசுவதில்லையென்று சிலர் கூறுகிறார்கள். ஆகையால் நீ எலும்பும் தசையும் கூடிய குலசேகரனே என்று நிச்சயிக்கிறேன்; ஒரு ஆந்தை பட்டப்பகலில் மறைவிடம் தேடுவதுபோலும் அல்லது ஒரு ஆவேசம் பூரணமதியைக் காண அஞ்சிப் பதுங்கிடம் தேடுவதுபோலும் நீ இந்த நேர்த்தியான புராதனவீட்டை வாசஸ்தலமாகத் தேடிக் கொண்டாய்." என்றான்:

குலசேகரன்:—சரி; உன் கேலிவார்த்தைகளாயிற்று. உண்மைப்பேச்சு நடக்கட்டும்.

அம்மனிதன்:—"ஆனால் உண்மையே பேசுகிறேன். நான் உன் நண்பன் என்று நீ அறிவாய்" என்றான்.

குலசேகரன்:—அப்படி நினைப்பதோடு நான் திருப்தி யடைகிறேன்.

அம்மனிதன்:—இது உத்தேச மட்டுமல்ல. இது உண்மையேயென்று இங்கும் வேறிடங்களிலும் ருசுப் படுத்தி யிருக்கிறேன்.

குலசேகரன்:—நல்லது. நான் உண்மையாகவே கூறுகிறேன். நீ எப்போதுமே உண்மையான சிநேகிதனாகவே யிருந்திருக்கிறாய். அப்புறம் என்ன?

அவ்வாலிபன்:—"நல்லது. அப்புறம் என்ன? சரி, இது நண்பர்களுக்கு வந்தனமளிக்கச் சுலபமானமார்க்கம். இதோபார்! உன்க்ஷேமத்தை யெப்போதும் கோருபவர்களாகிய பாணன், பெரியசாமி, டக்கன் முதலியவர்கள் இருக்கிறோம். நாங்கள் வடகடலில் கப்பல்களை மடக்கி இதுகாறும் நல்ல வேட்டையாடி யிருப்போம். அதை விட்டுவிட்டு உன்னைத் தேடிச் செல்லும்படி கப்பித்தான் கோபாலைத் தூண்டினோம். அவனும் அச்சுதனுமேனும் மற்ற பேரோடு சென்றிருந்தால் நல்ல வேட்டையாடி யிருப்பார்கள்" என்றான்.

குலசேகரன்:—"அய்யோ கடவுளே! நீங்கள் பிரியப்படி உங்கள் வழியேசென்று என்னை என் வினைப்படி விட்டுவிடுங்களேன்" என்றான்.

அம்மனிதன்:—"உன் வினைப்படியா? அதாவது உன்னால் கொள்ளை யடிக்கப்பட்ட இந்திரபுரி அல்லது வடநாடு முதலிய கப்பல்களின் ஆட்கள் யாரேனும் உன்னைக் கண்டதும் பிடித்துக்கொடுத்துவிட்டு, கடைசியில் நீ தூக்கிற் போடப்படுவதுதான். அதிலும் கப்பற் கொள்ளைக்காரர்களைக் கண்டு பிடிப்பதற்கு இத்தீவை

விட இச்சமயத்தைவிட வேறு உசிதமான இடமும் காலமும் கிடைக்காது. இத்தகையவிடத்தில் அந்த ஆபத்தில் சிக்கவிடாதபடி உன்னை மறைத்து வைத்துக்கொண்டிருப்பதற்காக எங்களுடைய உயர்ந்த காலத்தை வீணே போக்குகிறோம். ஜனங்கள் வரவர சந்தேகங்கொள்ளத் தொடங்குகிறார்கள். அவர்களிடம் செலவிட சாமான்களேனும் பணமேனும் இல்லாதகாலம் வரும்போது இச்சனங்கள் கப்பலில் வந்து தடவுவார்கள்'' என்றான்.

குலசேகரன்:—''சரி. அப்படியாயின் என்னை விட்டுவிட்டு நீங்கள் செல்லலாமே; எல்லாருக்கும் பாரபட்சமின்றிச் சரிபங்கு போட்டாயிற்று. அவரவர் இஷ்டப்படி நடக்கலாமே; நான் என் கப்பலை யிழந்துவிட்டேன். முன்பு நான் கப்பித்தானாக விருந்தேன். இனி இந்தக் கோபாலனாயினும் சரி வேறு யாராயினும் சரி, இன்னொருவனை யெனக்கு எஜமானாக ஏற்றுக்கொண்டு அவன்கீழ் நான் வேலை செய்யமாட்டேன். இதன்றி அந்தத் தென்னாட்டுக் கப்பலை நாம் பிடித்துக் கொள்ளையடித்தபோது கோபாலனும் அச்சுதனும் அக்கப்பலை அதிலிருந்த நீகரோ ஜனங்களோடு முழுகடித்துவிட முயன்றார்களல்லவா. நான் ஒரே பிடிவாதமாக அப்படிச் செய்யலாகாதென்று தடுத்தது முதல் அவர்களிருவருக்கும் என்மேல் துவேஷ மிருக்கிறது.'' என்றான்.

அதைக்கேட்டதே அம்மனிதன் மிக்க வியப்படைந்தவன்போல் குலசேகரனை யுற்றுநோக்கி ''அடடா! என்ன இப்போது உன் சமாசாரம்? நீ யுண்மையில் ஒருவர்க்கும் அஞ்சாத தீரசிங்கமாகிய எங்கள் பழைய கூட்டாளி குலசேகரன்றானா? நீயா இந்தக் கோபாலனுக்கும், அச்சுதனுக்

கும் அச்சம்கொண்டிருக்கிறாய்? அதிலும் நானும், பெரிய சாமி, டக்கன் முதலியோரும் எப்போதும் உன் வலதுகை போல் உயிர் கொடுக்கத் துணியவும் ஆயத்தமாக விருக்கை யில் நாங்கள் ஆலோசனையிலாவது, சண்டையிலாவது எப்போதும் உன்னைக் கைவிட்டதுண்டோ? ஆனால் நாங் கள் கப்பித்தானாகிய கோபாலன்கீழ் வேலைசெய்ய நேர்ந் தது. சமயோசிதப்படி சாதாரண மாலுமிகள் போன்ற எங்களுக்கு ஒரு எஜமானையிழந்து வேறொரு எஜமானிடம் வேலைசெய்ய நேர்வது நமது தொழில் முறைமையில் இயற்கையாகவே நேரிடுகிறது. இப்போது நான் உறுதி யாய்க் கூறுகிறேன். இனி நீயே கப்பித்தானாக விருக்க வேண்டும். நாங்கள் மடியநேர்வதாயினும் சரி, இனி அந்தக் கோபாலனைக் கப்பித்தானாக வைத்துக்கொண்டு அவ னிடம் ஒருபோதும் வேலைசெய்ய மாட்டோம். அவன் இரக்கமற்ற மகாகொடிய பாதகன் என்று கண்டுகொண் டோம். இல்லையில்லை. எங்களுக்குத் தலைவனாயிருக்கும் கப் பித்தானிடம் கொஞ்சம் பெரியமனிதத்தன்மை யிருக்கவே வேண்டும். மேலும், தரையில் நாடோடியாயிருந்த என்னை முதல் முதல் இக்கடல் தொழிலில் பிரவேசிக்கச் செய்த வன் நீயே'' என்றான்.

குலசேகரன்:—அய்யோ கடவுளே! அதற்காக நீ எனக்கு வந்தன முடையவனாக விருக்கவேண்டிய அவசியம் இல்லவேயில்லை. உண்மையாகவே கூறுகிறேன் பொன் னுசாமி.

மற்றவன்:—அது உன் பிரியப்படி. இப்போது என்னைப் பொன்னுசாமி யென்றழைக்க வேண்டாம்; கடலுக்கு வந்தபின் என்பெயர் அனந்தன்.

குலசேகரன்:—சரி அனந்தனே - இருக்கட்டும். அப்புறம் தற்சமயம் என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

அனந்தன்:—எந்த விதத்திலாயினும் சரி நான் உன்னை யிந்த எலிவளையிலிருந்து வெளியில் சுத்தமான காற்றுள்ள ஆரோக்கிய விடத்திற்கு அழைத்துச் சென்றே தீர் வேன். எந்த இடத்திற்குச் செல்ல உனக்குப்பிரியம்?

குலசேகரன்:—நமது நண்பர்கள் என்கிற இக்கூட்டத்தார் கண்களுக்குப் புலப்படாத வரை, எனக்குப் பிரிய மான எந்த விடமாயினும் சரியே.

அனந்தன்:—"நாம் இருவரும் கீழுள்ள காட்சி நன்றுகத் தெரியும் வேட்டைக் குன்றின் மேலேறி இராஜகுமா ர்களைப்போல் நன்றுகச்சம்பாஷிக்கலாம்" என்றுன்.

குலசேகரன் அவ்வாறே ஒப்புக் கொண்டதும் சற்று நேரத்திற்குள் இருவரும் அக்கட்டிடத்தை விட்டுப் புறப் பட்டார்கள். இருவரும் கட்டிடத்தை விட்டுச் சுமார் பத் தடிதூரம் சென்றதும் அனந்தன் நின்று திரும்பிப்பார்த்து குலசேகரனை நோக்கி "இந்த மாளிகையில் கடைசியாக எந்தப் பிரபு வசித்திருந்தார் தெரியுமா?" என்றுன்.

குலசேகரன்:—ஆரல் தீவைச்சேர்ந்த ஒரு பிரபு வசித்துக் கொண்டிருந்தார் என்று கேள்வி.

அனந்தன்:—அவர் எவ்வாறு மரணமடைந்தார் என்பது தெரியுமா? ஏனெனில் என்வரையில் அவர் தூக்கு மரத்தில் மடிந்தார் என்று கேள்விப்பட்டேன்.

குலசேகரன்—ஜனங்கள் அவ்வாறு தான் கூறிக்கொள் கிறுர்கள்.

அனந்தன்:—அப்பிரபு அத்தகைய அமிசை யுடைத்தா யிருந்தார் என்பது தெரிகிறது. அக்காலத்தில் அத்த கைய மரணம் கிடைப்பது ஒரு கௌரவமாகவே கரு தப்பட்டிருந்தது. ஆனல் அதற்குக் காரணம் என் னவோ?

குலசேகரன்:—தன் கீழிருக்கும் குடிகளை அக்கிரமமாக

இமிசைசெய்வது, கொல்வது, அவர்கள் சொத்துக்களை யபகரிப்பது, அரசருடைய கொடியின்மேல் குண்டுப் பிரயோகம் செய்தல் முதலியவைகளுக்காக அத்தண்டனை யடைந்தார் என்று கூறப்படுகிறது.

அனந்தன் அக்கட்டிடத்தை நோக்கி "அப்படியாயின் ஓ பிரபுவே! நீரும் எங்களைப்போன்ற ஒரு வீரரே. நீர் சுகமாய் உமது மாளிகையில் எலிகளோடு கூட இரும்" என்றான்.

குலசேகரன் "கெட்டியாகப் பேசவேண்டாம். இத்தகைய விடங்களில் எப்போதும் மிக்க மெதுவாய்ப் பேசுவதே நலம்" என்றான்.

இருவரும் பயிரிடப்படாத பூமியின் வழியே சென்று அச்சிறு நகரைக் கடந்து குன்றின்மேலேறினார்கள். குன்றின் அடியிலுள்ள வெளிப்பிரதேசங்களில், மறுநாள் நடக்கப்போகும் திருவிழாச் சந்தைக்கு யாவும் ஆயத்தம் செய்வதற்காக முன்பே ஏராளமான ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். சுற்றுப்பக்கங்களில் தூரத்திலிருக்கும் தீவுகளிலுள்ள ஜனங்களில் பெரும்பாலார் வேடிக்கைக்காகவும் வர்த்தக விஷயமாகவும் அங்கு வருவது வழக்கம்.

குன்றின் வலப்பக்கத்திலேயே ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்களோடு கலக்கவேண்டும் என்ற எண்ணமாவது பிரியமாவது குலசேகரனுக்குக் கிடையாது. ஆகையால் அவனும் அனந்தனும் குன்றின் இடப்பக்கமேறினார்கள். அவர்கள் கிட்டத்தட்ட குன்றின் உச்சியை நெருங்கியபோது இருவரும் ஏககாலத்தில் கீழ் இருக்கும் காட்சியைக் காணத் தட்டென்று நின்று திரும்பி நோக்கினார்கள்.

அக்குன்றின் அடிவாரத்திலிருந்து ஊர்வரையில்

ஜனங்கள் நடமாடிக்கொண் டிருந்தது மிக அழகிய காட்சியாக விருந்தது. நகரின் மத்தியில் கம்பீரமான ஒரு பெரிய கட்டிடம் இருந்தது. அது மிகப் பூர்வீகமானதும் மிக்க பலம் பொருந்தியதுமான ஒரு கோயில். குன்றினடிவாரத்தில் மற்றொருபக்கம் துறைமுகமிருந்தது. அதில் சிறிதும் பெரிதுமான பலவித நிறங்களையுடைய கப்பல்களும், அனேகம் விதமான படகுகளும் நிறைந்திருந்தன. பல தீவுகளிலுமிருந்து ஜனங்களையும் வர்த்தகத்திற்காகப் பண்டங்களையும் ஏற்றிக்கொண்டு அனேகம் படகுகள் வந்திருந்தபடியால் கடல் நெடுந்தூரம் வரையிலும், அத்தீவிற்கும் அடுத்ததீவிற்கும் இடையிலுள்ள ஜலசந்திமுழுமையும் ஜலம்புலப்படாவண்ணம் படகுகளே நிறைந்திருந்தன.

குன்றின் உச்சியில் எங்கு நின்று பார்த்தால் கீழிருக்கும் காட்சிகள் முழுமையும் நன்றாகத்தெரியுமோ அந்த விடத்தில் போய் இருவரும் நின்று மாலுமிகளின் வழக்கம் போல் தங்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளை யெடுத்து அணிந்துகொண்டு கீழே தெரியும் அழகிய காட்சியைப் பார்க்கத்தொடங்கினார்கள். அப்படிப் பார்ப்பதில் இருவர் நாட்டமும் ஒரு இடத்திலாவது ஒரு பொருளின் மேலாவது நிறுத்தப்படவில்லை. கள்ளன், வீதியில் சென்று கொண்டிருந்தால் முன்னே போலீஸ்காரன் எவனாவது வருகிறானா என்று கவனிப்பான். அதுபோல் அனந்தனுடைய பார்வை முதலில் அங்கிருந்த கப்பல் கூட்டத்தின்மேல் வீழ்ந்தது.

அங்கிருந்த கப்பல்களெல்லாம் வர்த்தகக்கப்பல்களே. ஆனால் அவற்றினிடையில் உயரமான பாய்மரங்களையுடைய ஒரு கப்பல் இருந்தது. அது சுத்தமாகவும் கம்பீரத்தோற்றமுடையதாகவும் அழகாய் வர்ணம் பூசப்பட்டதாகவும் இருந்தது. மேலும் அதன் பக்கங்களில் தெரியும் வரிசை

யான துவாரங்களால் அது பீரங்கிகளையுடைய ஒரு யுத்தக் கப்பலென்றும் அது பறக்கவிட்டிருக்கும் கொடியால் இந்திரபுரி இராஜ்ஜியத்தைச் சேர்ந்த கப்பலென்றும் தெரிந்தது. அக்கப்பல் மற்ற வர்த்தகக்கப்பல்களினிடையில் இருப்பது நாகரீகமில்லாத நாட்டுப்புற ஜனங்களினிடையில் இராணுவ உடையணிந்த ஓர் போர்வீரன் நடமாடுவதுபோல் இருந்தது.

அனந்தனுக்கு அக்கப்பலைக் கண்டதே வெறுப்புண்டாயிற்று. அவன் குலசேகரனை நோக்கி "இச்சனியன் போன்ற இந்திரபுரி யுத்தக் கப்பல் இங்கேனிருக்கவேண்டும். இச்சமயம் இது உலகின் கிழக்குப் பாதியில் எங்கேனு மிருக்கலாகாதா. நமது கப்பலில் நீ கப்பித்தானுகவும் நான் உன் உதவியாளாகவும் டக்கன் முதல் உத்தியோகஸ்தனுகவுமிருக்க வேண்டும். நம் கீழ் நல்ல தைரியமான ஐம்பது பலம் பொருந்திய ஆட்கள் இருக்கவேண்டும். நீ கட்டாயம் கப்பித்தானுகவிருப்பாய். அந்தக் காப்டென் கோபால் மிக்க மிருகத்தன்மையுடைவன். அவன் எந்நேரமும் வெறிக்கக் குடிப்பதும் நமது ஆட்களையே யடிப்பதும் சுட்டுக்கொல்வதும் வெட்டி விடுவதுமாயிருக்கிறுன். அதுமட்டுமல்ல. இங்கேயிருக்கும் ஊராரிடம் அக்கிரமமாய்ச் சண்டையிட்டுக் கொண்டான். அவர்களுக்குக் கோபம் மீறி விட்டதால் அவர்கள் உணவுப் பொருள்களேனும் நல்ல ஜலமேனும் கப்பலுக்கனுப்ப மறுக்கிறுர்கள். இருக்கிற நிலைமையை நோக்க ஒவ்வொரு நாளும் பகிரங்கமான சச்சரவு உண்டாகுமென்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது" என்றுன்.

47-வது அத்தியாயம்

தான் அவ்வளவு சங்கதி கூறியும் குலசேகரன் ஒரு பதிலுமளிக்காததைக் கண்ட அனந்தன் சட்டென்று அவனையும் அவன் பார்வை செல்லுமிடத்தையும் உற்று நோக்கினன். சற்று நேரம் அவ்வாறு நோக்கியபின் "என்ன உன் விஷயம்? இதென்ன? அந்தச் சின்ன படகில் என்ன விசேஷமிருக்கிறது? அதில் என்ன விசேஷம் நீ காண்கிருய்? அப்படகிலிருக்கிற அற்ப சாமான்களெல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் நமது ஒரு பீரங்கி வெடிச் செலவிற்குச் சமானமாகாது. ஏராளமான ரம் சாராயமும், புகையிலையும், பதனிட்ட மாமிசம் முதலியவையும், பொன் கட்டிகளும், நிறைந்திருக்கும் படகைக்கண்டு நமது பாய்மரங்களை விரித்துச் செல்லவேண்டும். அதைப் பின் பற்றி நெருங்கவேண்டும். உடனே நமது கறுப்புக் கொடியை விரித்துவிடவேண்டும்........" என்பதற்குள்,

குலசேகரன்:—அக்கப்பலின் கீழ்த்தட்டில் இருபது பீரங்கிகள் இருந்தால்——

அனந்தன்:—"இருபதா? நாற்பதிருக்கட்டும். நமது கப்பலில் பத்தேயிருக்கட்டும். அவசியமேயில்லை. இருக்கிற பீரங்கிகளைக் கிளப்பியதும் நமது கப்பலை அப்படகின் பக்கத்தில் கொண்டுபோவதும் நம்மாட்களை அதில் ஏறிக் கத்தி துப்பாக்கிகளைக் கொண்டு தாக்குவதுமே வேலை. கால்மணி நேரத்தில் அப்படகிலுள்ள யாவும் நமது வசமாய் விடுகிறது" என்றான்.

குலசேகரன் யாவும் கேட்டுக்கொண்டிருந்த பின், அனந்தனை நோக்கி "நீ யிந்தத் தொழிலில் மிக்க பிரியமுடையவனாக விருக்கிருய். நீ என்ன கூறினும் என்னை யந்தப் பேய்த் தொழிலுக்கு மறுபடி வரும்படிசெய்ய

உன்னால் முடியாது. சமாதானத்தோடு சாந்தமாய்ச்செல்லும் ஒரு வர்த்தகக் கப்பலை மடக்கிக் கொள்ளை யடித்து அதில் அகப்பட்டவற்றையெல்லாம் பங்கிட்டுக்கொண்டோம். இரண்டொரு வாரங்கள் அல்லது ஒரு மாதத்தில் சாராயமனைத்தும் குடித்தாய் விட்டது. புகையிலையனைத்தும் சாம்பலாய்ப் போய்விட்டது. தின்பண்டமனைத்தும் சமித்துப் போய்விட்டன. கையில் ரொக்கப்பணம் இருக்கிறவரையில் ஊரார் நம்மை மரியாதையாகவே நடத்துகிறார்கள். அது ஒழிந்ததோ யாவரும் சந்தேகமான பார்வையாய் நோக்கத் தொடங்குகிறார்கள். அதற்குள் நமக்குள்ளாகவே ஒருவரையொருவர் சிடுசிடுப்போடு நோக்கத் தொடங்குகிறோம். கடைசியில் கையில் சுத்தமாகக் காசில்லாதவன் நியாயதிபதியிடம் சென்று தன் நண்பரில் ஒருவனைக் காட்டிக் கொடுத்துவிட்டுப் பரிசுப்பணம் பெற முயல்கிறான். அதாவது நமது தலைகள் விற்கப்படும். கடைசியில் தூக்குமர தரிசனமே முடிவு.

நண்பனே! நான் கூறுவதைக்கேள். நான் இத்தொழிலை யடியோடு விட்டொழிக்கத் தீர்மானித்து விட்டிருக்கிறேன். அத்தகைய அதிகாரத்தோடு கறுப்புக்கொடி பறக்கும் அக்கப்பலில் கப்பித்தானாக விருப்பதைவிட இதோ நான் பார்க்கும் அழகிய படகுகளில் ஒன்றை யென் ஆயுள் பரியந்தம் வேண்டுமாயினும் ஓட்டிக் கொண்டிருப்பேன். இப்படகோட்டிகளாகிய ஏழை மனிதர் கௌரவமான தொழில் செய்வதோடு ஜனசமூகத்திற்குப் பரஸ்பரம் உதவிபுரியும் வேலையைச் செய்கிறார்கள். நாமோ அன்னியருக்கும் நமக்கும் அழிவையுண்டாக்கிக் கொள்ளும் காரியத்தைச் செய்வதோடு நமது மறுமையையும் அடியோடு கெடுத்துக்கொள்ளுகிறோம். ஆகையால் நான் யாவும் யோசித்தபின் கடைசியில் இத்தகைய வழியில் ஜீவ

னம் செய்வதை யடியோடு நிறுத்தி விடுவதென்று தீர்மானம் செய்து கொண்டேன்'' என்றான்.

அனந்தன்:—"தயவுசெய்து கூறு. கௌரவம் பொருந்திய நீ எங்கு சென்று வசிப்பாய்? ஒவ்வொரு நாட்டின் சட்டத்திற்கும் விரோதமாய் நடந்துகொண்டிருக்கிறாய். நீ எங்கு தங்கினாலும் அச்சட்டத்தின் கீழ் அகப்பட்டால் அதிகாரிகள் உன்னை நசுக்கி விடுவார்கள். குலசேகரம்! நான் இதுகாறும் பேசியதைவிட இச்சமயம் மிக்க அக்கரையோடும் மனப்பூர்வமாகவும் பேசுகிறேன். நானும் உன்போல் ஒரு சமயம் ஆலோசனை செய்தேன். அந்த யோசனை இரண்டொரு வினாடியேயிருந்தாலும் நெடுநாளைய சந்தோஷத்தைக் கெடுத்து விட்டது. இருக்கிற சங்கதி சுருக்கமாக என்னவெனில், நாம் இதே தொழிலில் நமது வாழ்நாளை முடித்துவிடாவிட்டால் நேராகத் தூக்குமரத்திற்குச் செல்லவேண்டுமென்பதே'' என்றான்.

குலசேகரன்:—தாங்களே சரணடைந்து விடுகிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள் என்ற கட்டளையை நாமேன் நமக்கு அனுகூலமாகச் செய்துகொள்ள லாகாது?

அனந்தன் அதிருப்தியோடு, "அப்படி வலிய இணங்கி விடுகிறவர்களுக்கு மன்னிப்பளிப்பதாகக் குறித்த காலத்தவணை கழிந்து சில நாட்களாய் விட்டன. இப்போது இணங்கினவர்களை யவர்கள் இஷ்டப்படி நடத்தலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் போய்ச் சிக்கிக்கொள்வது மிக்க மூடத்தனமாகும். நானாகவிருந்தால் இச்சந்தர்ப்பத்தில் போய் அவர்களிடம் சிக்கிக்கொள்ளமாட்டேன்'' என்றான்.

குல:—என், சமீபத்தில்கூட அந்த நிபந்தனைப்படி சிலர்

மன்னிப்பும் பெற்ருர்களே, அப்படியிருக்க நானேன் அச்சந்தர்ப்பத்தால் அனுகூலமடையலாகாது ?

அனந்:—"ஆ! ஹரிதாஸும் இன்னும் இரண்டொருவரும் அம்மாதிரி மன்னிப்புப் பெற்ருர்கள் என்பது உண்மையே. ஹரிதாஸ் என்பவன் அதிகாரிகளுக்கு நல்ல ஊழியம் செய்தான். அதாவது தன் நண்பர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டுப் பரிசுப்பணத்தைச் சந்தோஷமாக வாங்கிக்கொண்டான். நீ யுன் கொடிய விரோதி விஷயத்தில்கூட அத்தகைய காரியத்தைச் செய்து பணம் சம்பாதிக்க உடன் படுவாயென்று நான் கருதவில்லை" என்ருன்.

குலசே:—அப்படி இன்னெருவரைக் காட்டிக் கொடுத்து என் பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதைவிட ஆயிரம் தரமேனும் மடிவேன்.

அனந்தன்:—நீ அப்படிப் பட்டவன் என்று நானே சத்தியம் செய்வேன். ஆனல் இதுகாறும் மன்னிப்படைந்தவர்க ளெல்லாம் சாதாரண திருட்டுப்பயல்கள். அவர்களை மன்னித்து விடுவதில் துரைத்தனத்தார் சற்றும் யோசனை செய்யார்கள். நீயோ இக்கூட்டத்தில் பிரசித்தி பெற்றவன். உன்பெயர் பிரபலமாகத் தெரிந்திருக்கிறது. நீ சிக்கிக்கொண்டால் உன்னை யவர்கள் விட்டு விடுவது கஷ்டம்.

குலசேகரன்:—" என்விஷயத்தில் மட்டும் ஏன் அப்படி? நீ என்மேல் மெய்யான அன்புடையவனென்று எனக்குத்தெரியும். நாம் இவ்விஷயத்தைப் பற்றி இவ்வளவுதூரம் பேசியவரையில் நான் உன்னைப் பூரணமாக நம்புகிறேன். இப்போது கூறு. அந்த விளம்பரப்படி நான் ஏன் மன்னிப்படையலாகாது? நான்

வெளிக்குக் குரூரமான நடக்கை யுடையவன் போலவே நடந்துகொண் டிருக்கிறேன். ஆனால் சமயம் நேர்ந்தபோது நான் எத்தனை பிராணன்களைக் காப்பாற்றி யிருக்கிறேன் என்பது உனக்கும் தெரியும். வீணாக அழிக்கப்பட்டுப் போயிருக்கும் பொருள்கள் எவ்வளவையோ காப்பாற்றிச் சொந்தக்காரர்களிடம் அளித்திருக்கிறேன். உண்மையில் நான் ஒருவிஷயம் நிரூபிப்பேன்....'' என்றதே,

அனந்தன்:—"ஆம், நீ கடற்கொள்ளைக்காரனிலும் பெரிய மனிதத் தராவுடைய திருடன் என்று நிரூபிப்பாய். அதற்காகவே நானும் டக்கன் முதலியவர்களும் உன் மேல் விசுவாசம் கொள்கிறோம். உன் நடக்கையால் எங்களுக்கும் கொஞ்சம் கௌரவம் கிடைக்கிறது. அந்தத் துஷ்டனாகிய கோபாலால் எல்லாருக்குமே, நல்ல யோக்கியனுக்குக் கூட கெட்டபெயரே கிடைக்கும்.

இருக்கட்டும்; நீ முயற்சிசெய்து கடவுள் தயவால் ஜெயமே யடைகிறாய், அதாவது மன்னிப்புப் பெறுகிறாய் என்று வைத்துக்கொள்வோம். அதன்பிறகு நீ எங்கு செல்வாய்? எத்தகைய சமூகத்தில் போய் கலந்துகொள்வாய்? யாரோடு சினேகம் செய்வாய்? ஜனசமூகத்தில் எக்கூட்டத்தார் உன்னைச் சேர்த்துக் கொள்வார்கள்? முற்காலத்தில் இரண்டு ஊர்களைச் சூரையாடி ஜனங்களைச் சங்காரம் செய்துவிட்டு வந்தவனுக்குப் பெரியபட்ட மளிக்கப்பட்டது - அக்காலம் இப்போது போய்விட்டது. ஒரு முறை கப்பற் கொள்ளைக்காரன் என்று பெயரெடுத்து விட்டால் அதோடு அவன் அழிந்தவனே - பிறகு தூக்குமரத்திற்குத்தான் தகுதி. அவன் எவ்வளவு யோக்கியனாகமாறினும் ஒருபயனுமில்லை. அப்படி யவன் ஒருசமயம் கொஞ்சம்

பொருள் சேர்த்துக்கொண்டு பூரண யோக்கியனாக மாறி விட்டுக் கடற்கரையிலுள்ள ஒரு சிறு நகரின் ஓரத்தில் ஒரு தனிவீட்டில் வசித்துக்கொண்டிருந்தாலும் அங்கும் அவன் சனி யவனை விட்டதல்ல. அங்கேயும் அவன் தனியே கடலோரத்தில் உலவிக்கொண் டிருக்கையில் யாரேனும் எதிரில் வந்தால் அவனைக் கண்டதே ஒரு பேயைக் கண்டது போல் வெறுப்போடு எட்டப் போய்விடுகிறார்கள். இன்னொருவன் அப்படி எட்டச் சென்றவனைக் கண்டு 'யார் அம்மனிதன்? நீ யவனைக் கண்டதும் அப்படி அச்சத்தோடு தூரவந்து விட்டாயே?' என்று கேட்டால், அவன் மெதுவாய் 'ஆ! அவன் மனனிப்படைந்த கடல்கொள்ளைக்காரன்' என்று கூறிவிடுகிறான். இரண்டொரு தினத்தில் அச்சங்கதி ஊர்முழுதும் பரவிவிடும் பிறகு எந்தக் கௌரவமான மனிதனும் அவனிடம் பேசமாட்டான். எந்தப் பெண்ணும் அவனிடம் கைகுலுக்க மாட்டாள்" என்றான்.

குலசேகரன்:—"நீ விஷயத்தை அதிகமாக மெருகிட்டுக் கூறிவிட்டாய். ஆயினும் ஆயிரம் பெண்களில் ஒரு பெண்ணாவது தன் காதலனிடம் உண்மையுள்ளவளாக விருப்பாள். அவன் நீ கூறுகிறபடியே அத்தகைய கேவலமான நிலைமையிலிருப்பவனாயினும் சரி" என்றான்.

அனந்தன் அம்மொழிகளைக் கேட்டதே மனதில் ஏதோ புது உணர்ச்சி யுண்டானவன்போல் திடுக்கிட்டுக் குலசேகரனை உற்றுநோக்கி "ஓ! கடவுளே! இப்போது தான் எனக்கு ஞானதிருட்டி யுதயமாவதுபோல் தெரிகிறது. ஆம். இதுகாறும் நீ பேசியயாவும் உன் இயற்கைக்குணத்திற்கு மாறாக விருக்கிறதே; இதற்கென்ன காரணமென்று எனக்குப் புலப்படாமலே யிருந்தது. பேஷ்! இப்போது

தெரிந்துகொண்டேன். இதன் அஸ்திவாரத்தில் ஒரு பெண் இருக்கிருள். நல்ல நேர்த்தியான காதலி" என்று கூறிக் கலகலவென்று நகைத்தான்.

குலசேகரன்:—நீ எவ்வளவு நகைத்தாலும் நகை. உண்மையதுவே. ஒரு பெண்ணே என் நடக்கையிலுண்டாகியிருக்கும் சர்வமாறுதலுக்கும் காரணம். ஆனல் அவள் எத்தகைய பெண் என்பதை நீ யறியாய். நான் கூறுவது உண்மையே. நான் கப்பற்கொள்ளைக்காரன் என்று தெரிந்தும் என்னைக் காதலிக்கும் கன்னிகை யொருத்தி யிருக்கிருள். நான் உன்னிடம் மனம் விட்டுக் கூறுகிறேன். நான் முன்னமே, இத் தொழில் எனக்கு விருப்பமில்லையென்றும் இனி யிதிலிருக்க மனம்பிடிக்கவில்லை யென்றும் பன்முறை கூறியிருக்கிறேன். ஆனல் இப்போது அப்பெண்ணல் தான் இத்தொழிலை விட்டுவிடவேண்டுமென்று ஒரே பிடிவாதமான தீர்மானங்கொண்டேன்.

அனந்தன்:—"சரி, அப்படியாயின் பைத்தியக்காரருக்குப் புத்திகூறுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. நமது தொழிலிலிருப்போர் காதல் விஷயத்தில் கலப்பதாயின் அவர்கள் பைத்தியக்காரராகவே யிருக்கவேண்டும். ஒரு மனிதன் ஒரு பெண்ணுக்காகத் தன் பிராணனை யலட்சியமாகக் கருதுவதாயின் அப்பெண் ஒரு அபூர்வமான பெண்ணுகவே யிருக்கவேண்டும். ஆனல் ஒன்று பார். அப்பேண் உன்னைப்போலவே கொஞ்சம் புத்திசபலமுடையவளாக விருக்கலாகாதோ? அவள் சாதாரணப் பெண்ணுக விருக்க மாட்டாள். நன்னடக்கையும் நற்குணமும் உடையவளாகவே யிருக்கவேண்டும்" என்ருன்.

குலசேகரன்:—நீ கூறிய இரண்டு அமிசங்களும் உண்மையே.

அவள் சிறந்த வனப்புடையவள். அதோடு மிக்க நேர்த்தியான நடக்கையுமுடையவள்.

அனந்தன்:—அப்படியிருந்தும் நீ ஒரு கப்பற்கொள்ளைக் காரன் என்று தெரிந்தே அவள் உன்மேல் காதல் கொண்டிருக்கிறாள் ?

குலசேகரன்:—ஆம். தெரிந்தே.

அனந்தன்:—ஏன்! அப்படியாயின் அவள் ஒன்று பைத்தியக் காரியாகவாவதிருக்கவேண்டும், அல்லது கப்பற் கொள்ளைக்காரன் என்பதன் பொருளைப் பூரணமாக அறிந்து கொள்ளாதவளாக விருக்கவேண்டும்.

குலசேகரன்:—நீ இரண்டாவதாகக் கூறியது உண்மையே. அவள் உலக விவகாரங்களைப்பற்றி யதிகமாயறியாத வள், முற்காலத்தில் நமது வடநாட்டு வீரர்கள் வெளி யில் சென்று பல தீவுகளைச் செயித்துவந்து புகழ்பெற் றார்களல்லவா. அப்படிப்பட்ட தொழிலே இது என்று எண்ணிக்கொண்டிருக்கிறாள்.

அனந்தன்:—அத்தொழில் நமது தொழிலைவிட மிக்க மேலானதே. ஆயினும் இப்பெண் தைரியசாலியா யிருக்கவேண்டும். நீ யேன் அவளைக் கப்பலுக்கு அழைத்துவரலாகாது. அவள் உண்மையறியாமல் ஏன் மூடிவைக்கவேண்டும்.

குலசேரகன்:—அடடா! அத்தகைய பரிசுத்த உள்ள முடையவளும், உலகிலுள்ள இழிவான அக்கிரம நடக்கைகள் இத்தகையவையென்று அறியாதவளு மாகிய குற்றமற்ற கன்னிகையை நரகலோகத்திற்குச் சமதையான அக்கப்பலுக்கு நான் அழைத்து வருவ தாயின் என்னைவிட பரமசண்டாளன் வேறு யாரிருப் பான். என் குற்றம் எப்போதும் மன்னிக்கவொண் ணாததாகும்.

அனந்தன்:—ஏன், அப்படியாயின் இங்கு வந்தது முட்டாள் தனமென்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் பிரசித்தி பெற்ற கப்பற்கொள்ளைக்காரனாகிய குலசேகரன் என்பவனுடைய கப்பல் சத்தத்தீவினருகில் முழுகிவிட்டதென்றும் அதிலிருந்த ஆட்களெல்லாம் முழுகிவிட்டார்களென்றும் முன்னமேயெங்கும் பிரஸ்தாபமாய் விட்டிருக்கும். இனி நீ இப்பிரதேசத்தில் எங்கேனும் ஒளிந்துகொண் டிருப்பாயென்றும் இங்கு எந்தப் பெண்ணையேனும் மணம்புரிந்து கொள்வாயென்றும் உன் நண்பர்கள் விரோதிகள் அனைவரும் யூகித்துக் கொள்வார்கள். அதோடு ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டால் உன் பழைய தொழிலைவிட்டு மீன் பிடிப்பது வர்த்தகம் செய்வது முதலிய தொழிகளில் பிரவேசிப்பாய் என்றும் அறிந்து கொள்வார்கள்.

குல:—நானும் உண்மையில் அவ்வாறே தீர்மானித்திருந்தேன். ஆனல் ஒரு ஹாக்கர், எல்லார் விஷயங்களிலும் தலையிடும் ஒருவிதக் கபடக் கள்ளப்பயல் வந்து நீங்கள் இங்கிருப்பதைப்பற்றிக் கூறியபோது, நான் என் யோசனைப்படி நடக்குமுன் நீங்கள் தானா என்று கண்டறிய வேண்டுமென்றே இங்கு வந்தேன்.

அனந்:—ஆ! அது வரையில் நல்ல காரியமே செய்தாய். ஏனெனில் நாங்கள் இங்கிருப்பதை நீ எப்படியறிந்து கொண்டாயோ அப்படியே நீ யிருக்குமிடத்தையும் நாங்களறிந்துகொண்டே யிருப்போம். பிறகு சிலர் சினேகவாஞ்சையாலும், சிலர் உன்மேலுள்ள வெறுப்பாலும், சிலர் நீ எங்கே தங்களைக் காட்டிக்கொடுத்து விடுவாயோ என்ற பீதியாலும் மறுபடி யுன்னைக் கூட்

டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக உன்னிடம் வருவார்கள்.

குல:—நானும் அவ்வாறே சந்தேகித்தேன். ஆகையால் ஒரு நண்பர் என்னை இச்சந்தர்ப்பத்தில் இங்கு தம்மோடு அழைத்து வருவதாய்க் கூறியபோது நான் மறுக்காமல் ஒப்புக்கொண்டேன். அதோடு நான் மன்னிப்புப் பெறவேண்டுமாயின் அதற்கும் பணச் செலவிருக்கிறது. என் பொக்கிஷமோ இப்போது மிக்க குறைந்த நிலைமையிலிருக்கிறது. நான் எப்போதும் பண விஷயத்தில் மிக்க அஜாக்கிரதையும் அலட்சியமுமுடையவனென்பது உனக்குத் தெரிந்ததே...

அனங்:—ஆகையால் உன் பங்கைப் பெற்றுக்கொள்வதற்காக வந்தாய். அதுவரையில் நல்ல காரியமே செய்தாய். நாங்கள் கௌரவமாகவே பங்குபோட்டுக் கொண்டோம். கோபால் சட்டப்படி இவ்விஷயத்தில் நடந்துகொண்டான் என்றே கூறவேண்டும். ஆயினும் அவனைப்பற்றிமட்டும் உன் மனதில் ஒரு பக்கம் வைத்துவை. ஏனெனில் அவன் உனக்கு ஏதேனும் சூதான காரியம் செய்வான் என்று நான் அஞ்சுகிறேன். என்னத்திற்கெனில் உன் பங்கைத் தான் அடையலாமென்றே அவன் பூரணமாக நம்பிக் கொண்டிருப்பதால் இப்போது அதை வாங்கிக் கொள்ள நீ வந்து முளைப்பதைக் கண்டதே அவன் மனம் மிக்க வேதனையடையும். அதற்காக உன்மேல் எப்படியேனும் வஞ்சம் தீர்த்துக்கொள்ள நினைப்பான். அவனுடைய இயற்கைக் குணம் பெருந்தன்மையும் நீதியும் மனவிரக்கமுமுடையதல்ல.

குல:-நான் அவனுக்குப் பயந்தவனல்ல. அது அவனுக்கும் தெரியும். நான் அவனோடு சிநேகம் செய்யாமலே

யிருந்திருந்தால் நலமாகவிருக்கும். எல்லாரும் அப்படியே யிருக்கவேண்டுமென்பதே யென் கோரிக்கை. நான் இன்னொரு அசிங்கமான தண்டா வேலை செய்து விட்டேன். கொஞ்சகாலமாய் எனக்குச் சனியன் போல் இடையூறுகவிருந்த ஒருவனை நான் சத்தத் தீவிலிருந்து புறப்பட்ட தினம் காலை கத்தியால் குத்திக் காயப்படுத்தி விட்டேன்.

அனந்தன்:—அவன் இறந்துவிட்டானே? மேற்குத்தீவுகள் முதலிய இடங்களைவிட இந்த விடத்தில் இத்தகைய காரியங்கள் செய்வது ஆபத்துக்கிடமாகும். அந்த ஊர்களில் யாரேனும் இருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்களென்றால் அதைப்பற்றிக் கேள்வி முறையேயிராது. இங்கு அப்படியல்லவே. ஆகையால் நீ யவனைக் கொன்றுவிடவில்லை யென்று நம்புகிறேன்.

குலசேகரன்—எனக்கு அவனிலும் குறைந்த கோபமூட்டியவர்களுக்கு என்கோபம் மரணத்தை யுண்டாக்கியிருந்தாலும் இவன் மரிக்கவில்லை யென்றே நம்புகிறேன். உண்மையைக் கூறும்பட்சத்தில் அவனுக்காக விசனப்படுகிறேன். அவனை யொரு பைத்தியக்கார ஆளின் வசத்தில் ஒப்பித்து விட்டேன்.

அனந்தன்:—"என்ன? பைத்தியக்காரரிடமா? என்ன நீ கூறுவது? யாரிடம்?

குலசேகரன்:—கூறுகிறேன் கேள். நான் அங்கிருந்து புறப்படுவதற்கு முன் கடைசியாக என் காதலியாகிய மீனாளைச் சந்தித்துப் பேசக் கருதினேன் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் இந்தப்பயலின் முரட்டுத் தனத்தால் கெடுக்கப் படுவதாயின்........

அனந்தன்:—அதற்குக் காதல் நீதிப்படி மரணமே தகுதியான தண்டனை.

குலசேகரன்:—உன் விளையாட்டை நிறுத்து; நான் கூறுவதைக் கேள். நான் அவனைப் போய்விடும்படி கூறிய போது அவன் எதிர்த்துப் பேசத் தொடங்கினன். நான் பொறுமைசாலி யல்ல வென்பது நீயறிந்த விஷயமே; ஆகையால் உடனே அவனை யொரு குத்து குத்தினேன். சட்டென்று அவனும் குத்தினன். சற்றுநேரம் இருவரும் போராடினேம். எப்படியேனும் அவனை யங்கிருந்து போகச்செய்யவேண்டியது எனக்கு அவசியாமாகவிருந்தது. ஆகையால் வழக்கப்படி நான் எப்போதும் மடியில் வைத்துக் கொண்டிருக்கும் கத்தியை யெடுத்து அவனைக் குத்தி விட்டேன். மறுவிநாடியே அதற்காக மனஸ்தாபமடைந்தேன். ஆயினும் இனி என்ன செய்வது. அவனை மறைத்து விடவேண்டும், நான் தப்பியோடி விடவேண்டும். ஏனெனில் வீட்டிலுள்ளவர்கள் எழுந்து வந்து விட்டாலோ என்பாடு ஆபத்தாய் முடியும். அந்த வீட்டெஜமானே இத்தகைய விஷயங்களில் நெருப்பே. தன்கூடப் பிறந்தவனே யெனினும் பாரபட்சம் காட்டமாட்டான்.

ஆகையால் நான் துரிதமாக வேலைசெய்யவேண்டியிருந்தது. அச்சமயம் காயம்பட்டவன் மூர்ச்சையடைந்திருந்ததால் அவனுக்கு உயிர் இருக்கிறதென்றும் இல்லையென்றும் சுலபமாக அறியக்கூடவில்லை. அவனைக் கொண்டு போய்க் கடலிலேனும் ஆழ்ந்த ஒரு குட்டையிலேனும் போட்டுவிடுவதென்றும், பிறகு நான் ஆயத்தமாய் வைத்திருக்கும் படகிலேறி யிங்கு வந்துவிடுவதென்றும் தீர்மானித்துக்கொண்டேன்.

அதன்படியே அவனைத் தோளின்மேல் தூக்கிக் கொண்டு கடலைநோக்கிச் சென்றேன். கொஞ்சதூரம்

சென்றபோது அவன் பெருமூச்சுவிட்டு வேதனைப்படத் தொடங்கினன். அச்சமயம் நான் குன்றுகளுக்கிடையிலுள்ள சிறு சந்துவழியாய்ச் சென்றுகொண்டிருக்கிறேன். அவனை யப்போது கொன்றுவிட எனக்கு மனம் வரவில்லை. ஆகையால் அவனைத் தரையில் படுக்கவைத்து காயத்திலிருந்து வரும் இரத்தத்தை நிறுத்தி என்னுலான சிகிச்சையைச் செய்யத் தொடங்கினேன். அச்சமயம் எங்கிருந்தோ தட்டென்று ஒரு கிழவி அந்த விடத்தில் வந்து நின்றாள். நான் அவளை அத்தீவில் பன்முறை பார்த்திருக்கிறேன். அவள் மந்திரக்காரி என்று அவர்கள் கூறுகிறார்கள். அவள் காயம்பட்டவனைத் தன்னிடம் அளித்துவிடும்படி கேட்டாள். எனக்கிருந்த சந்தர்ப்பம் அச்சமயம் ஒரு யோசனையும் செய்யக்கூடவில்லை. அவன் என் கரத்தை விட்டொழிந்தால் போதுமென்றிருந்தது. அவள் என்னிடம் இன்னும் என்னவோ பேச ஆரம்பித்தாள். ஆனல் அச்சமயம் அவ்வீட்டிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவனகிய ஒரு கிழவன் சற்று தூரத்தில் பாடிக்கொண்டே வந்தான்.

அதன்மேல் அக்கிழவி பேசாமலிருவென்று மூக்கின் மேல் விரலைவைத்துச் சமிக்கை செய்துவிட்டு மெதுவாய்ச் சீழ்க்கையடித்தாள். உடனே எங்கோவிருந்து குட்டையான கோரரூபமுடைய ஒருவன் அங்குவந்தான். அவனும் அக்கிழவியும் உடனே காயம்பட்டவனைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். நான் அதே விநாடி புறப்பட்டுக் கடலோரம் சேர்ந்து படகில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன்" என்றான்.

48-வது அத்தியாயம்

குலசேகரன் அனந்தனிடம் தன் மற்ற சங்கதியையும் கூறத்தொடங்கி, "நண்பனே! அவர்கள் கூறுகிறபடி அக்கிழவி காற்றையும் அலையையும் அடக்கும் வல்லமை யுடையவள் என்பது மெய்யாயின் அன்று எனக்கு அவள் நல்ல உதவிசெய்தாளென்றே கருதவேண்டும். ஏனெனில் அன்று பயங்கரமான புயற்காற்றடித்து என் படகை எந்தத் திக்கிலோ கொண்டு போய்விட்டது. என்னிடம் தெய்வ கதியாய்த் திசையறிகருவி யிருந்தபோதிலும் நான் வழி தெரியாது அலைந்து மடியாமல் தப்பிவந்து சேர்ந்தது அற்புதமே. எப்படியோ கடவுள் தயவால் ஒரு சிறு தீவைச் சேர்ந்தேன். அங்கு நற்காலமாய் ஒரு கப்பல் இங்கு புறப்பட்டுவர ஆயத்தமாயிருந்தது; அதில் ஏறி யிங்கு வந்து சேர்ந்தேன். அக்கிழவி எனக்கு நல்லது நினைத் தாளோ கெட்டது நினைத்தாளோ நான் க்ஷேமமாக இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன். ஆனால் எண்ணிறந்த சந்தேகங்க ளோடும் கலவரத்தோடும் இருக்கிறேன்" என்றான்.

அனந்:—"அதென்ன சனிபிடித்த பாறையோ, நீ நமது கப்பலைக் கொண்டுபோய் மோதி விட்டாயே அப் பாறை...." என்றான்.

குல:—கப்பலை நான் கொண்டுபோய் மோதி விட்டேன் என்று கூறாதே. நான் ஆபத்தைக் கண்முன் காட்டி "நீங்களெல்லாம் படகில் செல்லலாம். நான் கூறுகிற படி செய்யுங்கள்" என்று பன்முறை கூறியும் அக் கோழைப்பயல்கள் அப்படிச்செய்யவில்லை. அவர்கள் நான் கூறியபடி செய்திருந்தால் கப்பல் இப்போது மிதந்துகொண்டிருக்கும். நீங்கள் கப்பலை விட்டுப் படகில் ஏறிச்செல்ல முயன்றால் யாவரும் கடலில்

அமிழ்ந்து போவீர்கள் என்று தெளிவாய்க் கூறினேன். மூடர்கள் என் பேச்சை அலட்சியம் செய்ததால் கடலுக்கிரையானார்கள். நானும் அவர்கள் கூடச்சென்றிருந்தால் நானும் அவர்களோடு மடிந்திருக்கவேண்டியதே.

அனந்:—"இப்போது உன் விவகாரம் எனக்கு நன்றாக விளங்குகிறது. ஆகையால் நான் உனக்குச் சரியாக உதவி செய்யவும் ஆலோசனை கூறவும் முடியும். நான் உனக்கு உண்மையான நண்பனாகவிருப்பேன். நீ எங்களைக் கைவிடவேண்டாம். அப்படிச் செய்வாயென்று நான் நினைக்கவில்லை. ஆயினும் வா. இன்று எங்களோடுகூடக் கப்பலிலேறவேண்டும்" என்றான்.

குல:—"எனக்கு வேறு அடைக்கலஸ்தலம் இல்லை" என்று விசனத்தோடு மொழிந்தான்.

குலசேகரன் மறுபடி தன் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் துறைமுகத்திலிருந்த படகுகளையெல்லாம் நோக்கினான். தைரியநாதம்பிள்ளையின் குடும்பம் எப்படகிலிருக்கிறதென்று அறியவே அவன் அவ்வாறு பார்த்தான். கடைசியில் தன் நண்பன் கூடவே பேசாமல் குன்றிலிருந்து கீழிறங்கினான்.

அனந்தனே மறுபடி பேசத் தொடங்குமட்டும் குலசேகரன் பேசாமலே அவன் கூடச் சென்றான்.

அனந்தன்:—"நீ அம்மனிதனுடைய காரியத்தை அதிகமாய் மனதில் உறுத்தச்செய்துகொண்டாய். நீ இதைவிடப் பெரிய காரியத்தைச் செய்துவிட்டு அதைப் பற்றிச் சட்டைசெய்யாமலிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்" என்றான்.

குலசேகரன்—ஆனால் இம்மாதிரி அற்ப கோபத்தின்மேல் அவை நடந்தவையல்ல. இதுமட்டுமல்ல. அவ்வாலி

பன் என் பிராணனைக் காப்பாற்றி யிருக்கிறான். நான் அதற்கு ஈடு செய்துவிட்டேன் என்று கூறக் கூடுமெனினும், பின்னால் இருவர்க்கும் இத்தகைய சச்சரவு நேர்ந்திருக்கலாகாது. ஆனால் அந்தக் கிழவி அத்தகைய சிகிச்சைகளில் தேர்ந்தவளென்று கருதப் படுவதால் அவள் அவனுக்குத் தக்க சகாயம் செய்திருப்பாள் என்றே நம்புகிறேன்.

அனந்தன்:—"உன்மேல் காதல்கொண்டிருக்கிறாள் என்று நீ கூறும் அந்த மீனாள் என்கிற கன்னிகையைப்பற்றி யெவ்வளவேனும் கூறு. ஆனால் அந்த அற்ப மந்திரக்காரியைப் பற்றியும், காயமடைந்த அந்தப் பயலைப் பற்றியும் இன்னும் கூறவேண்டாம். ஆ! இதோ இச்சனங்கள் ஆயத்தம் செய்திருக்கும் சிற்றுண்டிக் கடைகள், வேடிக்கைக் கூடாரங்கள் முதலியவை யிருக்குமிடத்திற்கு வந்துவிட்டோம். இங்கு என்ன கேளிக்கைகள் காணக்கூடும் என்று பார்ப்போம். இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்திரபுரியில் அனேகம் ஜாலவித்தைக்காரர்களையும், கழைக்கூத்தர்கள் முதலியவர்களையும் காணலாம். இங்கு தனி அகசியக்காரன் ஒருவனைக்கூடக் காணோம்" என்றான்.

அனந்தன் அவ்வாறு கூறும்போது குலசேகரன் ஒரு கடையின்முன் பல நிறம் பொருந்திய அழகான துணிகள் தொங்கவிடப்பட்டிருப்பதையும், இன்னும் பலவிதமான சாமான்கள் அங்கிருப்பதையும் கண்டான். அச்சாமான்கள் மற்றவைகளைவிட வெளிக்கு மிக்க அலங்காரம் செய்யப்பட்டவைகளாகக் காணப்பட்டன. அக்கடையின் முன் பக்கம், கடைக்காரன் பெயரும் அங்கு விற்கப்படும் முக்கிய சாமான்களும் வரையப்பட்ட ஒரு பலகை தொங்க விடப்பட்டிருந்தது. அக்கடைக்காரன் பெயர் சுந்தரம்

பிள்ளை யென்றதே யிதை வசிக்கும் நண்பர்கள் அவன் நமது பழைய நண்பனே யென்று அறிந்துகொள்ளலாம்.

குலசேகரன் அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கையில், கடைக்காரன் அவனைப் பார்த்துவிட்டு அங்கிருந்த சீலைகளில் சிலவற்றை அப்புறப்படுத்தத் தொடங்கினான். ஏனெனில் விற்கும் காலம் நாளைக்கே யாகையால் இன்று அவற்றைக் காற்றுறவே வெளியில் தொங்கவைத்தான்.

அதைக்கண்ட அனந்தன் குலசேகரனை நோக்கி "நண்பனே! ஒரு சமயத்தில் அக்கடைக்காரன் உன் கையில் சிக்கிக்கொண்டிருந்திருப்பான். அப்பயத்தால் உன்னைக் கண்டதே மறுபடி எங்கே சிக்கிக்கொள்கிறோமோவென்றஞ்சி நடுக்கத்தோடு அவ்வளவு துரிதமாய் அச்சீலைகளைச் சுருட்டிக்கொள்கிறான்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே குலசேகரன், "ஆ! அவன் சீலைகளா? நமது கப்பல் போய்விட்டபோது நான் ஜலபுறத்தில் விட்டுவிட்ட ஒரு பெட்டியிலிருந்த என் உடைகளே அச்சீலைகள்" என்று கூறிவிட்டு ஆத்திரத்தோடு சுந்தரம் பிள்ளையை நோக்கி,

"ஓ சுந்தரம் பிள்ளை! ஏன்? அட திருடனே! நாயே! திருட்டுப்பயலே! இதென்ன அர்த்தம்? நீ எங்கள் பொருள்களை மிக்க அநீதமான குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டு அதிக இலாபத்திற்கு விற்றது போதாதா? என் தகரப் பெட்டியையும் அதிலிருந்த என் உடைகளையுங் கூடவா அபகரித்துக்கொள்ளவேண்டும்?" என்றான்.

சுந்தரம் பிள்ளை சாதாரணமாய்க் குலசேகரனைக் காணவே பிரியப்பட்டிருக்கமாட்டான். ஆனால் இப்போது நேர்ந்த சம்பவத்தால் அவனைக் கண்டு பேசவேண்டியது அவசியமாயிற்று. அவன் தன்கூட எப்போதும் வரும் சிறுவன் செவியில் என்னமோ குசுகுசுவென்று கூறிவிட்டு,

அவன் தோளைப்பற்றித் துரிதமாகச் செல்லென்று தள்ளி விட்டு குலசேகரன் அனந்தன் இவர்கள் பக்கம் திரும்பி ஞன்.

சுந்தரம் பிள்ளை தன் சிறுவனிடம் இரகசியமாய்க் கூறியதென்னவெனில், "நீ துரிதமாய் நகரசபைக்கு ஓடிப் போய் தலைமை நகர அதிகாரி யிடமும் காவல் உத்தியோ கஸ்தரிடமும் இச்சமயம் சந்தையில் அவர்களுக்கு நல்ல வேட்டை யிருக்கிறதென்றும், தகுதியான உத்தியோகஸ் தர் சிலரை யனுப்பவேண்டும் என்றும் கூறிவிட்டு வா" என்பதே.

அத்தகைய படுகுழியைக் குலசேகரனுக்கு வெட்டி விட்ட சுந்தரம்பிள்ளை மறுவிநாடி மிக்க சந்தோஷமும் அன்புமுடைய நண்பன்போல் குலசேகரன் அருகில்வந்து "ஓ ஆண்டவனே! உனக்கு என்றும் மங்களம். நமது அன்பார்ந்த உத்தம நண்பராகிய காப்டென் குலசேகரன் இதோ வந்துவிட்டார். நாங்கள் எவ்வளவோ வியாகூலப் பட்டுக்கொண் டிருந்ததற்கு எங்கள் துயரமனைத்தும் ஒழி த்து எங்களுக்கு ஆனந்தமளிக்க வந்து விட்டார். ஒ! காப் டென்! என்மனம் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது கட வுளுக்கே தெரியும். இப்போது துயருற்றிருக்கும் உன் நண் பர்களுக்குச் சந்தோஷமூட்ட வந்துவிட்டது யாவர்க்கும் ஆனந்தமே. இப்போது தான் என்மனதில் சந்தோஷமுண் டாயிற்று" என்று புகழ்ந்து கூறினன்.

அவன் கூறும் மொழிகள் எவ்வளவுவரை மனப்பூர்வ மானவை யென்று குலசேகரன் அறிவான். ஆகையால் அவன் வெறுப்போடு, "என் விசனமுறும் நண்பர்களா! அட திருட்டுப்பயலே! இந்த என்னுடைய உடைகளை யெல்லாம் நீ எங்கிருந்து களவாடினுயென்ற உண்மையைக் கூறுவிட்டால், என்விஷயமாய் நீ யிதுகாறும் அடைந்த

விசனத்தைக் காட்டிலும் ஒரு புதுவிதமான விசனத்தை யனுபவிக்கும்படி செய்வேன்" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—"ஓ கடவுளே! தாங்களே என்னைக் காப்பாற்றவேண்டும், திருடிக்கொண்டு வந்தேனு? முன்பு அடித்த புயற்காற்றால் நமது நண்பரின் புத்தி சபலித்துவிட்டதுபோல் காண்கிறது" என்றான்.

குலசேகரன் கோபத்தோடு தன் கரத்திலிருந்த பிரம்புக் கைக்கோலை யுயரத் தூக்கிக்கொண்டு, "அட அசேதகமான திருட்டுப்பயலே! உனது பசப்பு வார்த்தைகளால் என்னை யேமாற்றி விடலாமென்று கருதுகிறாய்? என் உடைகளை யெங்கிருந்து களவாடினாய் என்பதைக் கூறிவிடு. இன்றேல் மறு நிமிடம் உன்தேகததில் தசையும் எலும்புகளும் ஒன்றாகப் பொருந்தியிருப்பது மிக்க சந்தேகமே" என்றான்.

சுந்தரம்பிள்ளை மறுபடி களவாடினேனு என்று கூறிவிட்டு "கடவுளே நமக்கு வழிகாட்டவேண்டும்" என்று மொழிந்து கொண்டே நகரின்பக்கமாய் நோக்கினான். ஏனெனில் குலசேகரன் கூறுகிறபடியே யெங்கேசெய்துவிடுவானோ வென்ற பயத்தால் தான் தன் சிறுவனிடம் இரகசியமாய்ச் சொல்லியனுப்பியபடி நகர அதிகாரிகள் வருகிறார்களா வென்றே ஆவலோடு நோக்கினான்.

குலசேகரன் அவனை நோக்கி "உடனே எனக்கு விடையளிக்க வேண்டும். இன்றேல் உன்னையொரு களிமொத்தையாக்கி விட்டு உன் கள்ளச் சாமான்களை யெல்லாம் இம்மைதானத்தில் எறிந்துவிடுவேன்" என்றான்.

இதற் கிடையில், இவையாவற்றையும் ஒரு வேடிக்கையாய் எண்ணிக்கொண் டிருந்த அனந்தன் குலசேகரனுடைய தோளைப் பற்றிக்கொண்டான். குலசேகரன் கூறியபடி செய்வதாயின் அதை யடியோடு தடுக்கவேண்டு மென்

பது அனந்தன் நோக்கமல்ல. ஆனால் வேடிக்கையாகவே இருவரும் சச்சரவிடாதபடி தடுப்பவன்போல் அப்படிச் செய்தான். அவ்வாறு அவன் தோளைப் பற்றிக்கொண்டு "நண்பரே! இவர் என்ன கூறுகிறாரோ கூறட்டும். அவர் தன் நியாயத்தைக் கூறுமாறு அவகாச மளிக்கப்படவேண்டும்" என்றான்.

குலசேகரன் "நீயொரு முட்டாள். என்னை விட்டு விடு" என்று ஆத்திரத்தோடு கூறினான்.

சுந்தரம் பிள்ளை:—"இவரை விடாமற் பிடித்துக்கொள்ளும். அய்யா! நீர் நல்ல பெரியமனிதர். இவரை விடவேண்டாம், பிடித்துக்கொள்ளும்" என்றான்.

அனந்தன்:—"அப்படியாயின் நீ கூறவேண்டிய உண்மையைக் கூறு; இன்றேல் இவரை யுன்மேல் விட்டுவிடுவேன்" என்றான்.

சுந்தரம்பிள்ளை:—நான் இவற்றைக் களவாடினேனென்று இவர் கூறுகிறார். இவை நியாயமாகவும் நீதியின் படிக்கும் என் சொந்தச் சொத்துகளான போது நான் எப்படி யிவற்றைக் களவாடுவேன்?

குலசேகரன்:—அட கள்ளப்பயலே! நீ யிவற்றை விலைக்கா வாங்கினாய்? யாரிடம் வாங்கினாய்? எவன் அவ்வளவு துணிகரமாய் இவற்றை யுனக்கு விற்றவன்?

சுந்தரம்பிள்ளை:—ஜலபுரத்தி லிருக்கும் எல்லப்பருடைய சகோதரியாகிய பாப்பம்மாள் தான் இவற்றை யெனக்கு விற்றார்கள். அந்தம்மாள் தானே உனக்காக மிக்க வியாகூலப்பட்டவர்கள்.

குலசேகரன்:—"ஆகவே அவள் பூரணமாய்க் கொள்ளையடிக்கத் தீர்மானித்து விட்டாளோ? ஆயினும் அவ

A 9

ளிடம் நான் பாதுகாப்புக்காக வைத்த பொருள்களை யவள் எப்படி விற்பாள் ?" என்றான்.

இச்சம்பாஷணையைக் கொஞ்சநேரம் நிகழ்த்திக்கொண்டே யிருந்தால் அதற்குள் தான் எதிர்பார்க்கும் நகர அதிகாரிகள் வந்துவிடுவார்களென்பது அவன் கோரிக்கை. ஆகையால், "ஏன் அந்தம்மாள் எதற்கும் நல்லதே செய்தார்கள். நீர்மட்டும் சற்று பொறுமையாய் நான் கூறும் காரணங்களைக் கேட்டால் அப்பெட்டியைப் பற்றியும், அதிலிருந்த சாமான்களைப்பற்றியும் நான் சரியான சமாதானம் கூறக்கூடும்." என்றான்.

குல:—"அப்படியாயின் உள்ள சங்கதியைப் பளிச்சென்று கூறு. உன்னுடைய சூது தந்திரம் முதலிய கபட விளையாட்டையெல்லாம் ஒருபக்கம் கட்டிவை. உன் வாழ்நாளில் ஒரு முறையேனும் நீ யோக்கியதையுடைய நாணயமான மனிதனென்று நிரூபித்தால் நான் உன்னை யொன்றும் செய்யாமல் விட்டு விடுகிறேன்" என்றான்.

சுந்திரம்பிள்ளை தந்திரமாய்க் காலம் கழியச் செய்ய எண்ணி "அச்சோம்பேறிப் பயலாகிய தலைமை யதிகாரிக்காகவே அவர்கள் இன்னும் காத்துக்கொண்டிருப்பார்கள். அவன் ஒரு அசமந்தப்பயல்" என்று தனக்குள்ளாகவே கூறிக்கொண்டு பிறகு கெட்டியாய், "ஓ கனம் பொருந்திய குலசேகரம்! இந்தப் பிரதேசம் மிக்க குழப்பத்திலும் துயரத்திலுமிருந்தது. இது உண்மை. சிறியோர் பெரியோர் யாவராலும் விசுவாசிக்கப்பட்ட நீர் அடியோடு காணப்படவில்லை. எங்கோ மாயமாய் மறைந்து விட்டீர். உயிரோடிருப்பதும் இறந்ததும் ஒன்றுமே தெரியாது" என்றான்.

குலசேகரன் பின்னும் கோபமடைந்து "அட திருட்

டுப்பயலே! இப்போது உனக்குச் சனியனாக உயிரோடிருக்கிறேன் என்று காண்பாய்'' என்றான்.

ஹூக்கர் சுந்தரம்பிள்ளை:—"இருந்தாலும் கொஞ்சம் பொறுமையாகவிருங்கள். நான் சொல்வதைப் பூரணமாகச் சொல்லும்படி அவகாசமளிக்கமாட்டேன் என்கிறீர்களே. சற்று கேளுங்கள். பிறகு அந்த வாலிபன் முருகப்பனுண்டே———'' என்றதே,

குலசேகரன் ஆவலோடு "ஹா! அவனைப்பற்றி என்ன?'' என்றான்.

சுந்தரம்பிள்ளை:—"அந்த முருகப்பன் ஒரு பக்கம் காணுமற் போய்விட்டான். எங்கும் காணப்படவில்லை. ஒரு வாலிபன் அடியோடு மாயமாய் மறைந்து விட்டான். குன்றுகளின் மேலேறிச் செல்லுகையில் தவறிக் கடலில் விழுந்து விட்டான் என்று கருதப்படுகிறது. அவன் துணிகர நடக்கையுடையவனே. நான் அவனுக்குச் சட்டைகள் முதலியவை விற்றேன். அவன் அவற்றிற்குப்பதிலாக துப்பாக்கி மருந்தும் குண்டுகளும் கொடுத்தான். இப்போது அத்தகைய வாலிபன் எங்கோ மாயமாய் மறைந்து விட்டிருக்கிறான், அடியோடு போய்விட்டான்'' என்றான்.

அனந்தன் யாவும் கேட்டபின் "நல்லது நண்பனே! இப்போது நீ கூறிய சங்கதிகளுக்கும், நமது காப்டென் குலசேகரத்தினுடைய உடைகளுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? நீ யுடனே நேராக அந்த விஷயத்தைப்பற்றி ஒரு முடிவு கூறுவிடின் நானே யுனக்குத் தக்க தண்டனை செய்வேன்'' என்றான்.

சுந்தரம்பிள்ளை தன் கரத்தை யசைத்துக்கொண்டு "பொறுமை! பொறுமை! யாவும் தக்க காலத்தில் அறிவீர்கள். நான் கூறியபடி இரண்டு ஆசாமிகள் மாயமாய்

மறைந்து விட்டார்கள். இவற்றோடு வசந்தமாளிகையின் தலைவராகிய தைரியநாதம் பிள்ளையின் அன்பார்ந்த புத்திரியாகிய மீனம்பாளின் அசௌக்கியம் ஒரு பக்கம் யாவர்க்கும் பெருத்த வியாகூலத்தை யளிக்கத் தொடங்கியது" என்றான்.

இப்போது தான் கூறும் சங்கதிகளுக்கும் காப்டென் குலசேகரன் தன் உடைகளைப்பற்றிக் கேட்ட கேள்விக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்று சுந்தரம் பிள்ளைக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் நகரத்திலிருந்து அதிகாரிகள் வருமட்டும் மெதுவாகக் காலத்தைப் போக்கவேண்டுமென்றே தந்திரமாய் அவன் அச்சங்கதிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். இத்தகைய விஷயங்களில் அவன் மிக்க தந்திர சாலியே.

குலசேகரனுக்கோ அவன் வஞ்சகமும் தந்திரமும் ஏறக்குறையத் தெரியும். ஆகையால் அவன் மிக்க கோபத்தோடு "அட பயலே! உன்னுடைய மூடத்தனமான அகசிய சம்பாஷணையில் அக் கன்னிகையைப் பற்றிப் பேசாதே. ஏனெனில் நீ மரியாதையின்றி அவளைப்பற்றிப் பேசினல் உன் செவிகளையறுத்து அவற்றை நீயே விழுங்கும்படி செய்வது நிச்சயம் என்று நம்பிக்கொள்" என்று தாழ்ந்த குரலாய் ஆனல் மிக்க உறுதியான மொழிகளால் கூறினன்.

சுந்தரம் பிள்ளை மெதுவாய் நகைத்துக்கொண்டே, "ஹா! ஹா! இவர் புத்திசாலித்தனமாய் கேலி பேசுகிறார். உண்மையைக் கூறுகிறேன். வசந்த மாளிகையைப்பற்றிய சங்கதியை விட்டுவிடுவோம். ஜலபுரத்தில் அத் தனி மாளிகையில் வசித்துக்கொண்டிருந்தாரே ஒரு வயது முதிர்ந்தவர் தெரியுமா? அந்த முருகப்பனுடைய தந்தை மார்க்கசேனம்பிள்ளை; அவரும் மாயமாய்க் காணமற் போய்விட்

டிருக்கிறார். நமது சத்தத் தீவின் தலைவராகிய தைரியநாதம் பிள்ளை குதிரை யேறிக்கொண்டு அவரைத் தேடச் சென்றிருக்கிறார். பைரவி கிருஷ்ணப்பிள்ளை யொருபுறம் காணமற் போனவர்களைத் தேடிக்கொண்டு போயிருக்கிறார். எல்லப்பர் ஒரு பக்கம் போயிருக்கிறார். சுருக்கமாகக் கூறும் பட்சத்தில் பாதிப்பேர் காணமற்போக மற்ற பாதி பேர் அவர்களைத் தேடப்போய் அலைந்துகொண் டிருக்கிறார்கள். தீவு முழுமையும் அவர்கள் காணமற் போனது பெருங்குழப்பமாயிருக்கிறது. யாவரும் வியாகூலத்தோடு அலைந்துகொண் டிருக்கிறார்கள். அடடா! என்ன கெட்ட காலத்தின் கொடுமை....'' என்றான்.

49-வது அத்தியாயம்.

காப்டென் குலசேகரனுக்கு மிக்க கோபமிருந்தாலும் அதை யொருவாறு அடக்கிக்கொண்டு நம்மைப் பற்றி யேதேனும் சங்கதி கூறுகிறானா பார்ப்போம் என்ற நோக்கத்தோடு சுந்தரம் பிள்ளை கூறியவற்றைப் பொறுமையோடு கேட்டுக்கொண் டிருந்தான்.

ஆனல் அச்சமயம் அவன் நண்பனாகிய அனந்தன் ஆத்திரமடைந்து "இருக்கட்டும், உடைகள்! உடைகள்!! உடைகள்!!!'' என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் தன் கரத்திலிருக்கும் பிரம்பைக் கோபத்தோடு வீசிக்காட்டிக் கொண்டே கேட்டான். அப்பிரம்பு சாதுரியமாய் வீசப்பட்டதால் அவன்மேல் படாவிடினும் ஒவ்வொரு முறையும் அவன் செவியருகில் மட்டும் வந்தது.

சுந்தரம்பிள்ளை ஒவ்வொரு முறையும் பின்னிடைந்து கொண்டு "அய்யா! அன்பு நிறைந்த அய்யா! மிக்க கருணையுடைய அய்யா! அம்மாதாகிய வீட்டுக்காரியஸ்தி, ஜலபுர

மாளிகையிலுள்ளவள், தன் எஜமான் போய் விட்டதற்கும், அவர் புத்திரனாகிய வாலிபன் மாயமாய் மறைந்து விட்டதற்கும், நமது தைரியநாதம் பிள்ளை ஒரு பக்கம் அலைச்சற் படுவதற்கும், அவர் குடும்பத்தில் நேர்ந்த இக்கட்டுகளுக்கும் மிக்க மனவருத்தமடைந்து...." என்பதற்குள்,

அனந்தன் தன் கோபத்தை யடக்க முடியாமல் மறுபடி பிரம்பை வீசினான். இச்சமயம் அது சுந்தரம் பிள்ளை செவிக்கு மிக்க யருகிற் சென்றுவிட்டது. செவியிலும் பிரம்பின் முனை பட்டது. அவன் சட்டென்று பின்னுக்குப் பாய்ந்தான். அவன் எதைக் கூறவேண்டுமென்று எண்ணியிருந்தானோ அது உடனே ஒரு தடையுமின்றித் தட்டென்று வெளிவந்துவிட்டது. அதாவது "அட சனியனே! இன்னும் என்னை யென்னதான் கூறச்சொல்லுகிறாய், அம்மாது தான் அவ்வுடைகளை யெனக்கு விற்றாள். நான் நியாயப்படி அவற்றை விலைக்கு வாங்கிக்கொண்டதால் அவை யென்னுடையவைகளே. நான் மடியுமட்டும் இதே தான் நான் கூறப்போவது" என்றான்.

அம்மொழிகளைக்கேட்ட குலசேகரன், "அதாவது அந்தப் பேராசைக்காரக் கிழவி தனக்குச் சற்றும் சொந்தமல்லாதவற்றை விற்றுவிட்டிருக்கிறாள். நீ கௌரவமான வர்த்தகன் அவற்றைத் துணிகரத்தோடு வாங்கிக்கொண்டாய்" என்றான்.

சுந்தரம் பிள்ளை "ஓ காப்டென் எங்களைப்போன்ற ஏழைகள் என்னதான் செய்வது? அந்த உடைகளின் சொந்தக்காரனாகிய நீரோ அடியோடு காணாமற் போய்விட்டீர். அவற்றைப் பாதுகாப்பில் வைத்திருந்த மார்க்கசேனம் பிள்ளையும் எப்படியோ மாயமாய் மறைந்து விட்டார். அந்த உடைகள் வீணாய் மக்கி பூச்சும் செல்லும்

அடித்து உருவில்லாமற்போகும் நிலைமையிலிருந்தன...." என்றான்.

குலசேகரன் வெறுப்போடும் கோபத்தோடும் "ஆகையால் அவைகள் அழிந்துபோகாமலிருப்பதற்காக அக்கள்ளக் கிழவி அவைகளை விற்றுவிடத் துணிந்தாள். பரமயோக்கியனாகிய நீ வாங்கிக்கொள்ளத் துணிந்தாய். இது தானே சங்கதி?" என்றான்.

சுந்தரம் பிள்ளை:—"கௌரவம்பொருந்திய காப்டென்! இதிலுள்ள விவகாரம் இம்மட்டேயென்று நினைக்கிறேன்" என்றான்.

குலசேகரன்:—அப்படியாயின், ஓ அசேதகத் திருட்டுப் பயலே, உன் அசேதகமான தேகத்தின்மேல் என் கரத்தை வைக்கவாவது இந்த விடத்தில் குழப்பம் செய்யவாவது நான் விரும்பவில்லை..." என்றதே,

சுந்தரம் பிள்ளை "பேஷ் நல்லகாரணம்" என்று சற்று கேலியாகக் கூறினான்.

குலசேகரன்:—" அட கள்ளப்பயலே! இன்னும் ஒரு வார்த்தை கூறினையோ உன் மூளை சிதறிவிடும். உனக்குத் தாராளமான நிபந்தனையே கூறுகிறேன். பூட்டுப் போட்டிருக்கும் கறுப்புத்தோற்பையைக் கொடுத்துவிடு. பொன் நாணயங்கள் இருந்த பையையும் இரண்டொரு உடைகளையு மளித்துவிடு. மற்றவற்றை நீ வாயிற்போட்டுக்கொள்" என்றான்.

ஹாக்கர்:—"பொன் நாணயங்களா? நாணயங்களைப்பற்றி எனக்கென்னதெரியும்? நான் வியாபாரம் செய்தது உடைகளே. அவற்றில் பொன் நாணயங்களிருந்திருந்தால் சந்தேகமின்றித் தங்களிடம் அளிப்பதற்காக வீட்டுக்காரியஸ்தியாகிய சுந்தரம்மாள் அவற்றைப்

பத்திரமாய் எடுத்து வைத்திருப்பாள். அவை ஈரத்தால் பழுதடைகிறவையல்ல'' என்றான்.

குலசேகரன்:—"சரி, என் சிறுபையையும் மற்ற சாமான்களையும் கொடு. இன்றேல் ஒரு வார்த்தையும் பேசாமல் உன் மண்டையைப் பிளந்து விடுவேன்'' என்றான்.

அச்சமயம் தந்திரசாலியாகிய ஹாக்கர் சுந்தரம் பிள்ளை நகரத்தின் திக்கை நோக்கினான். அவன் முகத்தில் உடனே சந்தோஷக்குறி தோன்றியது. ஏனெனில் நகரக் காவல் போலீஸைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களில் ஆறு பேர் வருவதைக் கண்டான். அவர்கள் பன்முறை கப்பற் கொள்ளைக்காரரோடு போராடிய பழக்கத்தால் எப்போதும் போதுமான ஆட்களாகச் செல்வதே நலம் என்று கருதினார்கள்.

சுந்தரம் பிள்ளை குலசேகரனை நோக்கி தைரியத்தோடு அலட்சியமாய் "அய்யா கௌரவம் பொருந்திய காப்டனே! உமது கள்ளனைச் சமயோசிதப்படி யும்மிடமே வைத்துக் கொள்ளும். ஏனெனில் இந்த உடைகளும் நீர் கூறும் பொன் நாணயங்களும் முதலில் எந்த வழியாய் உம்மிடம் வந்தனவோ என்பது யாருக்குத் தெரியும்?'' என்றான்.

அவன் இவ்வார்த்தைகளைக் கூறியது மிக்க அலட்சியமாகவும் கோபமூட்டத் தக்க விதமாகவும் இருந்ததால் குலசேகரன் சற்றும் நிதானிக்காமல் ஹாக்கரின் சட்டைக் கழுத்துப் பட்டையைப் பிடித்துக்கொண்டு இழுத்து அங்கிருந்த மேஜைமேல் வீழ்த்தி ஒரு கரத்தால் அவனைப் பற்றிக்கொண்டு மற்றொரு கரத்திலிருந்த பிரம்பால் நன்றாக அடித்தான். அம்மேஜைமேல் விற்பதற்காக உடைகள் வைக்கப்பட்டிருந்தன. அம்மேஜை யுருண்டு விழுந்தது.

இவையாவும் திடீலென்று நடந்ததால் சுந்தரம் பிள்ளை பலசாலியாயினும் ஒன்றும் செய்யமுடியாமல் கோவென்

நலறிக் கூவினன். இதற்குள் நகரத்திலிருந்து வந்த போலீஸார் அங்கு நெருங்கிவிட்டதால் அவர்கள் குலசேகரன் மேல் பாய்ந்து அவன் கையிலிருந்து சுந்தரம் பிள்ளையை விடுவிக்க முயன்றூர்கள். ஊரார் இரண்டு மூன்று முறைகளில் அங்கு தங்கியிருந்த கப்பற்கொள்ளைக்காரரோடு சச்சரவுசெய்தபடியால் இச்சமயத்தில் போலீஸார் பட்சத்திலேயே சேர்ந்து கொண்டார்கள்.

குலசேகரன் மிக்க துணிகரத்தோடு யுத்தம் புரிந்தானுயினும் கடைசியில் போலீஸாரால் பிடிக்கப்பட்டான். அனந்தன் தன் நண்பனுக்குத் தன்னுலானவரையில் சகாயம் செய்து பார்த்து அவன் சிக்கிக்கொண்டதே ஓட்டம் பிடித்தான். குலசேகரன் சிறையாக்கப்பட்டு நகர சபா மண்டபத்திற்கு நகரவீதிகளின் வழியாய் அழைத்துக் கொண்டு போகப்பட்டான். அச்சமயம் குலசேகரன் தான் சிக்கிக்கொண்டிருக்கும் ஆபத்தை யுணர்ந்தான். உடனே அதனுல் நேரிடும் சம்பவங்கள் ஏககாலத்தில் அவன் மனதில் தோன்றின். "அடடா! அக்கள்ளப்பயல் நமது பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டால் எடுத்துக் கொள்ளட்டும் என்று பேசாம லிருந்துவிடாமற் போனேமே. அப்படிச் செய்திருந்தால் இந்த இக்கட்டு நேர்ந்திருக்காதே" என்று மனவருத்தமடைந்தான். நகர மண்டபத்தில் நியாயாதிபதிகளும் மற்ற உத்தியோகஸ்தரும் சபைகூடியிருந்தார்கள். குலசேகரன் சபாமண்டபத்திற்குள் அழைத்துக்கொண்டு போகப்பட்டதே விவகாரங்கள் அதிசயமான விதமாக மாறிவிட்டன.

குலசேகரன் பிடிபட்டதே ஓட்டமெடுத்த அனந்தன் நேராகத் தங்கள் கப்பலுக்குச்சென்று இச்சமயம் எவ்விதத்திலேனும் குலசேகரனை மீட்டுவிட வேண்டுமென்று தங்கள் ஆட்களைத் தூண்டினன். உடனே கப்பலிலிருந்த

கொள்ளைக்காரர்களாகிய ஆட்களெல்லாம் கைத் துப்பாக்கி, கத்தி, ஈட்டி, கைத்தடி முதலிய ஆயுதங்களை யணிந்து உடனே கூட்டமாய்ப் புறப்பட்டு துரிதமாய் நகர மண்டபத்திற்கு வந்து விட்டார்கள்.

அவர்கள் திடீலென்று வந்து உள்ளேபுகுந்து அங்கிருந்தவர்களைத் தாக்கிக் குலசேகரனை மீட்டுக்கொண்டார்கள். போலீஸார் இவ்வாறு நடக்குமென்று சற்றும் எதிர்பாராததால் முரட்டுத்தனமான அக்கள்ளர்கள் முன் நிற்க முடியவில்லை. ஊராரும் போலீஸாருக்கு உதவிசெய்ய முயன்று, எதிரிகளிடமுள்ள துப்பாக்கி கத்திகளைக் கண்டதே பின்னிடைந்து விட்டார்கள். கள்ளர்கள் அதுகாறும் தடி முதலிய ஆயுதங்களைமட்டுமே யுபயோகித்தார்கள். அவர்கள் குலசேகரனை யழைத்துக்கொண்டு செல்லும்போது இரண்டு மூன்றுபேர் அடிக்கடி திரும்பித் திரும்பி தொடர்ந்து வருகிறவர்களைத் தாக்கித் துரத்திக்கொண்டே சென்றூர்கள். கடைசியில் கடலோரம் சேர்ந்து அங்கு ஆயத்தமாக விருந்த படகுகளிலேறித் துரிதமாய்த் தங்கள் கப்பலில் போய்ச் சேர்ந்தார்கள்.

இனி அக்கூட்டத்தில் சேரலாகாது, அக்கொள்ளைத் தொழிலை யடியோடு விட்டுவிடவேண்டும் என்று தீர்மானித்திருந்த குலசேகரன் இப்போது விதியின்றி அக்கூட்டத்தாரிடமே, அக்கள்ளக் கப்பலிலேயே அடைக்கலம் புகவேண்டிய தாயிற்று. நாம் என்ன முயற்சி செய்தாலும் வினைப்பயன்படி நேரிடும்; ஈசுவரனுடைய கட்டளைப்படியே விவகாரங்கள் நடைபெறுமன்றி நம்மெண்ணப்படியே எதுவும் நடக்குமென்று நம்பலாகாது. ஆயினும் நாம் மனசாட்சி கூறுகிறபடி பாபமான காரியங்களை - அன்னிய ஜீவன்களுக்கு வருத்தத்தை யுண்டாக்கத்தக்க காரியங்களைச் செய்யாமல், சத்கருமங்களையே செய்துகொண்டு

அதனாலுண்டாகும் பயன் நமது கருமத்திற்குத் தக்கபடி ஈசுவரன் அளித்ததென்று திருப்தியோ டிருக்கவேண்டும். ஈசுவரன் கருணையோடு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவை நமக்கு அளித்திருப்பதால் அவ்வாறு நடப்பது நமது கடமை. அதற்குமேல் நேரிடும் சுகதுக்கங்கள் பிராரப்தபலன்கள் என்று கருதவேண்டும்.

* * * * *

இப்போது நாம் ஆபத்தில் விட்டுவிட்டிருக்கும் முருகப்பன் சங்கதியைக் கவனிப்போம். நாம் அவனை வசந்த மாளிகையின் ஓரத்தில் பிராணபத்தான நிலைமையில் விட்டுவிட்டிருந்தோம். இப்போதவன் மிக்க சுகவீனமான நிலைமையி லிருக்கிறான். நற்காலமாய் குலசேகரன் குத்திய கத்தி முருகப்பனுடைய பக்கவெலும்புகளில் பாய்ந்தாலும் உட்கருவிகளில் எதிலும் காயம்படவில்லை. ஆனால் இரத்தப்போக்கு அதிகமாக நேர்ந்ததால் மிக்க பலகீனம் ஏற்பட்டு அவன் முகம் வெளுத்து விட்டது. நாகம்மாள் அவனுக்குச் சிகிச்சைசெய்ய உபயோகப் படுத்திய அரியமூலிகையின்சக்தியால் அவன்தேகம் கூடியவரையில் கொஞ்சம் சுகமடைந்திருந்தது.

இப்போது நாகம்மாளும் முருகப்பனும் தூரத்திலுள்ள ஒருதீவில் ஒருவீட்டில் உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள். அவன் முதலில் காயம்பட்ட விடத்திலிருந்து பிச்சிமலையிலுள்ள, நாம் முன்புகூறிய நாகம்மாளின் வாசஸ்தலத்திற்குக் கொண்டுபோகப்பட்டான். அப்போது அவனுக்குச் சரியான ஸ்மரணையில்லை. பூரணஸ்மரணை யுண்டாவதற்குள் அங்கிருந்து இப்போதிருக்கும் தூரத்திலுள்ள தீவிற்குப் படகில் கொண்டுபோகப்பட்டான். அங்கிருந்த ஜனங்களுக்கு நாகம்மாளிடம் மிக்க பக்தியும் பீதியுமிருந்ததால் எந்தவேளையில் அவள் எத்தகைய கட்டளையிட்ட

போதிலும் உடனே தடையின்றிச் செய்யக்கூடிய மன முடையவர்களாக விருந்தார்கள். அதிலும் அவள் தன் கட்டளைகளை மிக்க இரகசியமாகவே வெளியிடுவதால், அக் கட்டளைகளைத் தாங்களே நிறைவேற்றினும் அவற்றைப் பற்றி யவர்களுக்கு மிக்க அதிசயமாகவே யிருக்கும்.

முருகப்பன் சுமாராக அலங்கரிக்கப்பட்ட ஒரு அறை யில் நெகிடித்தீயினருகில் உட்கார்ந்துகொண்டு கையில் பிடித்திருக்கும் புத்தகத்தை அதிருப்தியோடு வாசித்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் பல எண்ணங்கள் வேதனை செய்துகொண்டிருந்தன. கடைசியில் அவ்வெண் ணங்கள் மீறிவிட்டப்படியால் சமாளிக்கமுடியாமல் புத்த கத்தை யெறிந்து விட்டுச் சிந்தனையிலிருந்தான்.

அவன் எதிரில் உட்கார்ந்திருந்த நாகம்மாள், ஏதோ மருந்து ஆயத்தம் செய்துகொண் டிருந்தவள், ஆவலோடு தன் ஆசனத்தை விட்டெழுந்து முருகப்பனருகிற் சென்று அவன் நாடிகளைத் தொட்டுப்பார்த்து, மிக்க அன்போடு "உனக்கு தேகத்தில் நோய் இருக்கிறதோ? எங்கிருக் கிறது?" என்று வினவினாள். முருகப்பன் தன் நன்றி யறி தலை யறிவித்துக்கொண்டே நோய் ஒன்றுமில்லை யென்று கூறினான். ஆயினும் அவன் தன் கேள்விகளுக்கு விடை யளித்தமாதிரியால் அம்மூதாட்டிக்குத் திருப்தியுண்டாக வில்லை.

அவள் அவனைநோக்கி:—"அட நன்றிகெட்ட பயலே! நான் உனக்கு எத்தகைய உதவிசெய்தேன். என் சாமார்த் தியத்தாலும் வல்லமையாலும் உன்னை மரணத்தின் வாயி னின்றும் மீட்டுக் காப்பாற்றினேன். அப்படியிருக்க நீ யிதற்குள்ளாகவே என் சகவாசத்திலிருக்க வெறுப் படைந்து விட்டாய். கொஞ்சம் சுகம் உண்டானதே என்னை

விட்டுவிட்டு வேறெங்கேனும் போய்விட ஆவல்கொண்டிருக்கிருய்" என்ருள்.

முரு:—நீ என்னைப்பற்றி இப்படி நினைப்பது அநீதம். நீ என் அன்பார்ந்த இரட்சகி. நான் உன் சகவாசத்தால் வெறுப்படையவில்லை. ஆனல் இலௌகிகத்தில் நான் செய்யவேண்டிய கடமைகளிருக்கின்றன.

நாகம்மாள்:—"கடமைகள்! நீ என்னிடம் காட்டவேண்டிய நன்றியின் முன் என்ன கடமைகள் குறுக்கிடலாகும்? கடமைகள்! பேஷ்! உன் எண்ணங்களெல்லாம் துப்பாக்கியால் வேட்டையாடுவதும் குன்றுகளின்மேல் தாவிச்செல்வதுமாகிய வேலைகளிலிருக்கின்றன. இத்தகைய வேலைகளுக்கு உன் தேகசுகம் இன்னும் சரியான நிலைமையிலில்லை. அப்படியிருந்தும் அத்தகைய வேலைகளுக்குச் செல்லவே உன்மனம் ஆவல்கொண்டிருக்கிறது" என்ருள்.

முரு:—என் பட்சமுள்ள அம்மையே! அப்படியல்ல. நீ கூறிய காரியங்களுக்கல்ல நான் செல்லக் கருதுவது. நான் என் தேகசுகம் இடங்கொடுப்பதால் உன்னை விட்டுப் பிரிந்து போவதற்குக் காரணமாக நான் கூறும் கடமைகளில் ஒன்றைக் கூறுகிறேன். அதாவது புத்திரனுக்குத் தந்தையிடமிருக்கும் கடமையே.

நாகம்மாள் நகைத்துக்கொண்டே, "உன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமையா? இத்தீவில் அத்தகைய கடமையை நாம் எப்படியுடனே மறுதலித்து விடலாம் என்பது உனக்குத் தெரியாதுபோலும். உன் தந்தையைப் பற்றிய வரையில் நீ யவ்வளவு கருதுவதற்கு அவர் உனக்கு என்ன செய்தார்? நீ முன்பு என்னிடம் கூறியபடி பல வருடங்கள் உன்னை அன்னியரிடம் எழ்மையான நிலைமை

யில் வளரும்படி விட்டு விட்டு நீ உயிரோடிருக்கிறுயா செத்தாயா என்று விசாரிக்காமல், குஷ்டரோகியாகிய பிச்சைக்காரருக்குப் பிச்சை யிடுவதுபோல் அப்போதைக் கப்போது அற்ப உதவி யனுப்பிக்கொண் டிருந்தவன் ருனே? இந்தப் பிற்காலங்களில் அவனுடைய துன்ப வேளையில் உன்னைத் துணையாக வைத்துக்கொண்டான், உனக்குப் பலவித இம்சைகளை யளித்தான். ஆனுல் ஒரு காலும் உனக்குத் தந்தையாகவிருக்கவில்லை'' என்றுள்.

முரு:—"நீ கூறுவதில் கொஞ்சம் உண்மையிருக்கவே யிருக்கிறது. என் தந்தை யன்புடையவரல்லர். ஆனுல் அவர் எப்போதும் என்னிடம் பட்சம் காட்டியே வந்தார். மனிதர்கள் அன்பைத் தங்கள் ஆளுகையில் வைத்துக் கொண்டிருப்பதில்லை. ஆயினும் புத்திரர்கள் எப்போதும் தந்தையிடம் நன்றியோடு நடந்துகொள்ள வேண்டியது அவர்கள் கடமை. என் தந்தை யெனக்குக் கல்வியளித்தார். அவர் என்னிடம் அன்பு வைத்திருக்கிறுர் என்று எனக்குத் தெரியும். அவர் துர் அதிட்டமுடைவர். அவர் என்னிடம் அன்புவைக் காவிடினும்——'' என்றதே,

நாகம்மாள், துரிதமாய் "அவன் உன்மேல் அன்பு வைத்திருக்கவில்லை. அவன் தன்னைத் தவிர வேறு யாரையேனும் எந்த வஸ்துவையேனும் நேசித்தது கிடையாது. அவன் துர் அதிட்டவானே. ஆனுல் அத்துரதிட்டங்களுக்குப் பாத்திரவானே. ஓ முருகப்பா! உன் பெற்றேரில் ஒருவரே யிருப்பவர். தன் இருதயத்திலுள்ள இரத்தத்தைப் போல் உன்மேல் அன்பு வைத்திருப்பவர் அந்த ஒரு ஆளே'' என்று ஆத்திரத்தோடு மொழிந்தாள்.

முருகப்பன்:—ஆம், என் பெற்றேரில் ஒருவரே இருப்பது எனக்குத் தெரியும். என்தாய் இறந்துபோய் நெடுங்

காலமாய் விட்டது. ஆனால் உன்வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. என்தந்தைக்கு என் மேல் அன்பில்லை யென்கிறாய். மறுபடி என்னை யிருதய இரத்தம்போல் நேசிக்கும் ஒருவர் இருப்பதாகக் கூறுகிறாய்.

நாகம்மாள்:—என் வார்த்தைகள் மாறுபடவில்லை, மாறுபடவில்லை. உன் பெற்றோரில் ஒருவரே யிருப்பவர்; உன் பரிதாபமான தாயார் இறந்துபோகவில்லை. ஓ கடவுளே! அவள் இறந்துபோ யிருக்க லாகாதா! ஆனால் அவள் இறக்கவில்லை, உன் தாய் ஒருத்தியே உன்னை நேசிப்பவள். நான்-நான்...என்கண்மணியே, நானே துரதிட்டசாலியாகிய உன் தாயார்" என்று கூறிக்கொண்டே அவனைச் சேர்த்தணைத்துக் கொண்டாள். அவள் அவனைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டதும் தாரை தாரையாய்க் கண்ணீர் விட்டுத் தேம்பித் தேம்பி யழுதாள். அவள் பிறந்தது முதல் புத்தியறிந்து அழுதது அதுதான் முதல் தடவை யென்று கூறலாம்.

முருகப்பன் அவள் நடக்கையில் தான் கேட்டதையும் கண்டதையும் உணர்ந்து சொல்லொணு வியப்படைந்தான். அவள் செய்கை பைத்தியத்தால் என்று அவன் கருதினும் அவன்மனம் சபலித்துத் தன்னால் கூடியவரையில் அவளுக்குத் தேறுதல் கூறியும் பயனில்லை.

நாகம்மாள் "நன்றியில்லாப் பையனே! பெற்றதாயல்லாமல் வேறு யார்தான் உன்னை யிப்படிப் பாதுகாத்துக் காப்பற்றி யிருப்பார்கள்? நான் உன் தந்தையைக் கண்டவுடனேயே அவன் யாரென்று தெரிந்து கொண்டேன். ஆனால் அவனோ தன்னைப் பார்ப்பது யாரென்று அறிந்து கொள்ளவில்லை. சிறுவனாகிய நீ அவன் பாதுகாப்பி லிருப்

பதைக் கண்டேன்; அப்போதே இயற்கையுணர்ச்சி நீ என் புத்திரனே யென்று எனக்கு அறிவித்தது. நீ என்னைச் சற்றும் எதிர்பார்க்காத போது எவ்வளவு அடிக்கடி நீ விளையாடிக்கொண் டிருக்கும்போதும் உலவச்சென்றபோதும் என்னைச் சந்தித்திருக்கிறாய் என்பதை நினைத்துப்பார். எத்தனைமுறை நீ குன்றுகளி னுச்சியில் அபாயகரமான விடங்களி லிருப்பதைக் கண்டு உனக்குத் தீங்குண்டாகாத படி மந்திரங்களைச் செபித்திருக்கிறேன் தெரியுமா ? உன் க்ஷேமத்திற்காக உன் கழுத்தில் அப்பொன் சங்கிலியை நான்றானே கட்டியிருக்கிறேன். என் புத்திரனுக்கன்றி வேறுயாருக்கேனும் நான் இந்த அருமையான வஸ்துவை யளித்திருப்பேனா ? ஓ ! மைந்தனே சாதாரணமான ஒரு தாயார் தன் மைந்தனுக்குச் செய்ய நினைத்தாலும் நடுங்கத் தக்க உதவிகளை நான் உனக்குச் செய்திருக்கிறேன். நடு இரவில் நீ செல்லும் படகுகளுக்கு ஒரு ஆபத்தும் நேராத வண்ணம் தேவதைகளைப் பிரார்த்தித் திருக்கிறேன், காற்றையும் மழையையும் பன்முறை யுனக்காக வேண்டிக் கொண்டிருக்கிறேன் " என்றாள்.

முருகப்பன் நாகம்மாள் தன் வார்த்தைகளில் மிக்க ஆத்திரம் கொள்வாளென்று கருதி அவளுக்கு ஆறுதல் உண்டாகுமாறு பக்குவமான விடையளிக்கத் தொடங்கி,

" அம்மா ! நான் உன்னை அம்மா என்றழைப்பதற்கு அனேகங் காரணங்க ளிருக்கின்றன. எனக்கு நீ எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறாய். நான் எப்போதும் உன்னிடம் புத்திரவாஞ்சையையே யுடையவனாக விருப்பேன். ஆனால் நீ என் கழுத்தில் கட்டிய சங்கிலி போய்விட்டது. அந்தப் போக்கிரி என்னைக் குத்தியது முதல் அதைக் காணோம் " என்றான்.

நாகம்மாள்:—" அந்தோ ! இச்சமயத்தில் நீ யதை நினைக்க

லாமா? இருக்கட்டும். நானே யச்சங்கிலியை யுன் கழுத்திலிருந்து கழற்றி உனக்கு உயிரினும்பிரியமான வளுடைய கழுத்தில் அணியச் செய்திருக்கிறேன். நீங்கள் இருவரும் மணம்செய்து கொள்ளவேண்டு மென்பது என் விருப்பம். இவ்வுலகில் நான் செய்யச் சக்தியுடைய காரியங்களில் அது ஒன்றே நான்விரும் புவது. அதற்காகவே அப்படிச் செய்தேன். அது எப்படியும் நிறைவேற்றப்படும். யார் தடை செய்யி னும் அது நடந்தேதீரும்'' என்றாள்.

50-வது அத்தியாயம்.

நாகம்மாள் கூறிய வார்த்தைகளைக் கேட்டதே முரு கப்பன் வியப்பும் கலக்கமு மடைந்தான். அவள்தான் தாயார் என்ற உண்மை யவனுக்குள் தோன் றுவிடினும் அவன் அவளை நோக்கி, "அந்தோ! எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் அந்தஸ்தில் இருக்கும் வித்தியா சத்தை நீ கவனிக்கவில்லைபோலும். அவள் தந்தை திரண்ட செல்வவந்தன். அவர்கள் பூர்வீக வமிசத்தைச் சேர்ந்த வர்கள்'' என்று மனச்சோர்வோடு மொழிந்தான்.

அம்மொழிகளைக் கேட்ட நாகம்மாள் பெருமையோடு நிமிர்ந்து "நாகம்மாளின் வாரிசைவிட அவர்கள் செல்வ வந்தரல்லர். உன் நரம்புகளில் ஓடும் இரத்தத்தைக் காட்டி லும் உயர்ந்த குலத்தின் இரத்தம் அவர்கள் தேகத்தில் இல்லை. தைரியநாதம் பிள்ளை எந்தக் கடலரசனின் வமி சத்தில் பிறந்தவனென்று பெருமையாய்க் கூறிக்கொள்ளு கிறானோ அதே வமிசத்தில்தான் உன் தாயும் ஜனித்தவள் என்று அறிந்துகொள். சில மூடர்கள் நினைப்பதுபோல்

A-10

உன் தந்தைக்கும் எனக்கும் நேர்ந்த சம்பந்தம் ஒரு குருவின் ஆசிர்வாதம் பெருததாலேயே உன் பிறப்பு தாழ்ந்ததென்று கருதுகிருயோ? நாங்கள் நமது வடநாட்டின் பூர்வீக வழக்கப்படி மணம் செய்துகொண்டோம் என்று அறிந்துகொள். அச்சடங்கின்படி நடந்த மணத்திற்குத் தைரியநாதம் பிள்ளையேனும் வேறு யாரேனும் ஒரு ஆக்ஷேபனையும் கூறமுடியாது. நான் செய்தது முட்டாள்தனமாயினும் அது என் சந்ததிக்கு எத்தகைய அகௌரவத்தையும் உண்டாக்காது" என்ருள்.

நாகம்மாள் நிதானமாய் உறுதியாய்க் கூறிய அம்மொழிகளைக் கேட்டதே முருகப்பன் மனதில் இவள் கூறுவது உண்மை யென்று பட்டது. மேலும், ஒரு ஸ்திரீ பித்தம் பிடித்ததால் இப்படிப் பேசுகிறவளாயின் தான் தற்கால ஒழுங்கின்படி மணம் புரிந்துகொள்ளவில்லையென்பதையும் தன் அவமானத்தையும்பற்றி யெங்கேனும் சாந்தமாகத் துயரத்தோடு கூறுவாளோ என்று அவன் சிந்திக்கலாயினுன். இவற்ருல் பலவிதக் கலவரமான சிந்தனைகள் அவன் மனதில் உதித்தன. பைத்தியக்காரி யென்று தான் நினைத்திருந்த அக்கிழவி கடைசியில் தன்னைப் பெற்ற தாயாரென்று கருதியபோது அவன் மனதில் சொல்லொணு வியப்பும் கலக்கமும் உண்டாயின. அவன், தன் மனக்கலக்கம் மாறுவதற்காகச் சம்பாஷணையை வேறு சில்லறை விஷயத்தில் மாற்றிவிடவேண்டுமென்று சிந்தித்தான். இடையில் இவ்விஷயத்தைப்பற்றி நன்ருய் ஆலோசனை செய்து ஆராய்ச்சியும் செய்யவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். எப்படியாயினும் அவள் ஆரம்பத்திலிருந்து தன்னிடம் அன்பு காட்டி நடந்துகொண்டிருக்கிருள். இப்போது தன் பிராணனையே காப்பாற்றியிருக்கிருள். அத்தகையவளிடம் புத்திரவாஞ்சை

யும் நன்றியும் காட்டி நடந்துகொள்ளவேண்டியது தன் கடமையாகவே யிருப்பதால் அவளைத் தாய்போல் நடத்தத் தகும் என்று எண்ணிக்கொண்டான்.

கடைசியில் அவளை நோக்கி "நீ யப்படிக் கட்டளை யிடுகிறவரையில் தாயார் என்றே நான் உன்னை யழைக்கவேண்டும். என் அம்மா! தைரியநாதம் பிள்ளை எந்தக் காரணத்தாலாவது இப்போது என்மேல் கொண்டிருக்கும் கோபத்தையும் வெறுப்பையும் விட்டுவிட்டுத் தன் புத்திரியாகிய புனிதவதியிடம் நான் என் காதலை வெளியிடும்படி அனுமதி யளிப்பார் என்று நினைக்கிருயா?" என்ருன்.

நாகம்மாள் :—புனிதவதியா? புனிதவதியைப்பற்றி யார் பேசியவர்? நான் கூறியது மீனுளைப்பற்றி.

முருகப்பன்:-ஆனல் நான் கூறியது புனிதத்தைப்பற்றியே. இச்சமயம் நான் சிந்திப்பது புனிதத்தைப்பற்றியே. இனி எப்போதும் நான் அவளையே நினைத்துக்கொண்டிருப்பேன்.

நாகம்மாள்:—என் மகனே! அது ஆகாத காரியமே. மந்தமான சந்தோஷமும் சாதாரண வீட்டுக் காரியஸ்தி போன்ற குணமுடைய அவளை, உயர்ந்த நோக்கங்களும் பெருந்தன்மையான எண்ணங்களுமுடைய மீனுளைவிட விசேஷமாக நினைப்பதாயின், நீ மந்தமான இருதயமும், உற்சாகக் குறைவும் உடையவனுக விருக்கவேண்டும். ரோஜாமலர் கைக்கு எட்டும்போது அதை விட்டுவிட்டுத் தாழ்ந்த நீலமலரைப் பறிக்க யார் நினைப்பார்கள்?

முரு:—அத்தாழ்ந்த மலர்களே மிக்க மணம் பொருந்திய இனிமையானவை யென்று சிலர் கருதுகிருர்கள். நான் அதே நம்பிக்கையில் உயிர் வைத்திருப்பேன்; அதே நம்பிக்கையில் உயிர் விடுவேன்.

காகம்:—"நீ தைரியமாய் என் முன் அப்படிக்கூறலாகாது" என்று கடினமாய்க் கூறியதும் மறுவினாடியே தன் குரலை மாற்றிக்கொண்டு மிக்க அன்போடு அவனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டு, சாந்தமாகவே "குழந்தாய்! என் அன்பார்ந்த மைந்தனே! என்னிடம் அப்படிப் பேசவேண்டாம். தாயார் தன் புத்திரனைக் கண்டறிந்த அந்த நிமிடத்திலேயே அவள் மனம் முறியச் செய்வது புத்திரனுக்குச் சரியானதல்ல. வேண்டாம். இப்போதொன்றும் பதில் கூற வேண்டாம். நான் கூறுவதைக்கேள். நீ மீனாளை மணம் புரியவேண்டும். நான் அவள் கழுத்தில் ஒரு இரக்ஷையைக் கட்டியிருக்கிறேன். உங்கள் இருவர் க்ஷேமமும் அதில் பொருந்தியிருக்கிறது. என் வாழ் நாளின் உழைப்பு முழுமையும் இந்த நோக்கத்திலேயே செலவழிக்கப்பட்டது. அது அப்படியே நடக்கவேண்டுமென்றி வேறு வழியாய் நடக்கலாகாது. மீனாள் என் மகனுடைய மனைவியாகியே தீரவேண்டும் என்று கூறுகிறேன்" என்றாள்.

முரு:—"ஏனம்மா! புனிதமும் உனக்கு அதே மாதிரி சுற்றத்தாள் தானே. அவள் மேலும் உனக்கு அதே அன்பு இருக்கிறதல்லவா?

காகம்:—இரத்தக் கலப்பில் அதே மாதிரிதான். எள்ளளவு வித்தியாசமுமில்லை. ஆனால் அன்பில் பாதிகூட அப்படியில்லை. மீனாள் சாந்தமும் ஆனால் உயர்ந்த எண்ணங்களும், அவற்றிற்குத் தக்க சிந்திக்கும் புத்தி சாமர்த்தியமுமுடையவள். அவளுடைய மார்க்கங்கள் என்னைப்போல் இவ்வுலகோரின் சாதாரண மார்க்கங்கள் போன்றவையல்ல. அற்ப நோக்கங்கள், தாழ்ந்த சிந்தனைகளல்ல. புனிதம் சாதாரண உலக

வாழ்க்கைக்குப் பொருத்தமானவள். அவள் அற்பத்தில் மகிழ்ச்சியடையக்கூடியவள். அவள் தன் குறுகிய அறிவுக் கெட்டாதவைகளை நம்பாமல் அவைகளைக் கேலிசெய்து, அதிக புத்தி வல்லமையை மூடத்தனமாகவும், அபூர்வ சக்தியைப் புத்தியின் பலகீனமாகவும் பிரஸ்தாபிப்பவள்.

மூரு:—அவள் உண்மையாகவே கண் மூடித்தனமான கொள்கைகளை நம்புகிறவளல்ல. அவற்றில் உற்சாகம் கொள்கிறவளுமல்ல. அம்மா! நீ இன்னொரு விஷயம் கவனத்தில் வைக்கவேண்டும். அவள் பரஸ்பரம் என் மேல் அன்புடையவளாயிருக்கிறாள். மீனாள் யாரையேனும் நேசிப்பதாயின், அந்தப் புது மனிதனாகிய காப்டென் குலசேகரன் என்பவனையே நேசிக்கிறாள்.

நாகம்:—அவள் குலசேகரனை நேசிக்கவில்லை. நேசிக்க அவளுக்கு அவ்வளவு தைரியமா? அது மட்டுமல்ல. அக் குலசேகரனும் இனி யவள்மேல் நாட்டத்தைச் செலுத்த முடியாது. அவள் முதல் முதல் வசந்த மாளிகைக்கு வந்தபோதே மீனாள் உனக்காகவே பிறந்திருக்கிறாள் என்று கண்டிப்பாய்க் கூறி யிருக்கிறேன்.

மூரு:—“நீ யப்படி அவசரப்பட்டுக் கூறியதாலே தான் அவன் என்னுடைய பிடிவாதமான பகைவனாய் விட்டான். அதனாலேயே எனக்கு இக்காயமும் சற்றேறக் குறைய பிராணாபத்தும் நேர்ந்தன. அம்மா பார்! உன் செய்கைகள் இதுவரையிலேயே எத்தகைய ஆபத்துகளை யுண்டாக்கின. இனியும் அவ்வழியில் செல்லாதிருப்பதுவே நலம்” என்றான்.

அவன் கடிந்து கூறிய மொழிகள் மின்னல் போல் அவள் மனதில் பலத்தோடு தாக்கின. அவள் தன் கரத்

தால் நெற்றியில் அறைந்துகொண்டு ஆசனத்திலிருந்து சாய்ந்து விழுபவள்போல் தோன்றினாள். அதைக் கண்ட முருகப்பன் மிக்க மனவேதனையடைந்து துரிதமாய்ப் பாய்ந்துபோய் அவளைத் தன் புயங்களில் ஏந்திக்கொண்டான். அச்சமயம் என்ன கூறுவதென்று அவனுக்கு விளங்கவில்லையெனினும், தடுமாற்றத்தோடு கூற முயன்றான்.

அதற்குள் நாகம்மாள் "ஓ கடவுளே! என்னைக் காப்பாற்றும். இவன் மூலமாய் என் குற்றத்திற்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கருதவேண்டாம்" என்று கூறிச் சற்று நிதானித்து, ஆம் "சிறுவனே. எனக்கே கூறத் தைரியமில்லாத மொழிகளை நீ துணிகரத்தோடு கூறினை. உண்மையாயிருந்தால் நான் நம்பக்கூடாததும், ஆயினும் அதைக் கேட்டு இன்னும் நான் உயிர் வைத்துக்கொண்டிருப்பதுமாகிய சங்கதியை என் மனதில் நுழைத்து விட்டாய்" என்று மிக்க மனவருத்தத்தோடு கூறினாள்.

முருகப்பன் "அம்மா! நான் உனக்குக் கோப மூட்டக் கருதியாவது, மனவருத்த முண்டாகும் என்று தெரிந்தாவது ஒன்றும் கூறவில்லை. என் மனதில் தோன்றியதையியம்பினேன். நான் உனக்கு என் மனதார ஒருபோதும் வருத்தத்தை யளிக்கமாட்டேன். நான் எவ்வாறு உனக்கு மனவருத்தத்தை யுண்டாக்கினேனென்பது எனக்கு விளங்கவில்லை" என்று அவனால் கூடியவரை சமாதான மொழிகளைப் புகன்றும் பயன்படவில்லை.

நாகம்மாள் ஆத்திரத்தோடும் நடுக்கமுற்றகுரலோடும் அவனை நோக்கி "ஆம்; நீ என் வல்லமையில் எனக்கிருக்கும் நம்பிக்கையிலேயே சந்தேகத்தைப் புகட்டி என் மனதை நோவ வைத்துவிட்டாய். என் வல்லமை மூடர்கள் நம்பக் கூடியதென்றும், அது வீண் மயக்கமென்றும்

அலட்சியமாகவே அந்தப் புனிதவதி கூறுவது வழக்கம். நீயும் அப்படியே கூறுகிறாய். அறிவாளிகள், உண்மை யறிந்தவர்கள் அனேகர் எனக்கிருக்கும் வல்லமைக்காகப் பொறுமைப் படுவார்கள். என் பொறுமைக்கும் மற்ற குணங்களுக்கும் பரிசாக நான் பெற்றுக் கொண்டது இந்த அபூர்வ வல்லமையே. அதை யலட்சியமாய்க் கருதி வீண் மயக்கமென் றெண்ணிச் சந்தோஷப்படுவோர் படட்டும். என் சிம்மாசனம் இருண்ட மேகங்களே. என் செங்கோல் மனிதர் கண்டு மனங்கலங்கும் இடி மின்னலே. நான் அந்த வல்லமையைச் செலுத்திக்கொண்டுதானிருக்க வேண்டும்; அல்லது மடியவேண்டும். இரண்டிலொன்று என் வல்லமையின் அபூர்வ இரகசியம்; சாதாரண மனிதர்களுக்கு இவை விளங்குவது கஷ்டமே" என்றாள்.

முருகப்பன் மிக்க மனக் கசிவடைந்து "என் அன்பார்ந்த அம்மா! இவ்வாறு துக்ககரமாய்ப் பேசவேண்டாம் என்று உன்னை மிகவும் வேண்டிக் கொள்கிறேன். உனக்கிருக்கும் வல்லமைகளில் எவ்வளவு வரை நான் நம்பவேண்டுமென்று நீ கருதுகிறாயோ அவ்வளவையும் நான் சிந்திக்கிறேன். ஆயினும் உன் நன்மைக்காகவே இதை வேறு விதமாய்ச் சிந்தித்துப் பார். இத்தகைய மர்மமான வல்லமைகளிலும் பயங்கரமான எண்ணங்களிலும் சிந்தனைகளிலு மிருந்து உன் மனதை வேறு நல்ல விஷயங்களில் திருப்பு. அப்போது வாழ்நாளில் உனக்கு இன்பமே தோன்றும். மத போதனையால் நிம்மதியேற்படும்" என்றான்.

நாகம்மாள் அவன் கூறிய வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தித்து அவற்றின்படி நடக்கக் கருதியவள்போல் பொறுமையோடு யாவும் கேட்டுக்கொண் டிருந்தாள். ஆனால் அவன்

கூறி முடிந்ததே நாகம்மாள் தலையசைத்து, "அது ஆகாத காரியம்'' என்று முன்னிலும் கடுகடுப்போடும் பயங்கர மான குரலோடும் கூறத்தொடங்கி, "இதே நான்கு சுவர் களுக்குள்ளே என் தந்தை என் செய்கையால் மடிந்தார். அதோ அந்த அறையில் தான் அவர் சவமாகக் காணப் பட்டார். பெற்ரோர் கட்டளையை அவமதித்து நடப் பதன் பயனை யறிந்து ஜாக்கிரதையாயிரு'' என்று கூறி விட்டுச் சட்டென்று ஆசனத்தை விட்டெழுந்து அந்த அறையை விட்டுச் சென்ருள். முருகப்பன் அங்கேயே தனியாய் உட்கார்ந்து இதுகாறும் நாகம்மாளிடம் தான் கேட்ட அதிசயமான சங்கதிகளைப்பற்றிச் சிந்திக்கலானன். அவன் வரையில் தன் தந்தையின் போதனையால் அத் தீவில் வழங்கும் மூடக்கொள்கைகளில் அவநம்பிக்கை கொண்டிருக்கிருன். இப்போது நாகம்மாள் மற்றவர்க ளெல்லாம் தன் விஷயங்களை நம்பும்படி செய்தாலும் தன்னை நம்பும்படி செய்யலாகாது என்று கருதினன். ஆயினும் இப்போது அவள் பேசியமாதிரி அவள் புத்தி சபல முடையவளல்லவென்று புலப்படச்செய்தது. ஆனல் அவள் தன் தந்தையைத் தானே கொன்று விட்டதாகக் கூறிய விஷயம் மிக்க பயங்கரமானதும் நம்பக் கூடாததாயு மிருந்தது. அதனல் அவள் கூறிய மற்ற விஷயங்களைப்பற் றியும் சந்தேகம் தோன்றியது.

நாகம்மாளும் அவளுடைய வேலையாளாகிய குள்ள னும் முருகப்பனும் இருக்கும் அவ்வீட்டிற்கு ஒருவரும் வருகிறதில்லை. ஆதலால் மேற்கண்ட விஷயங்களைப்பற்றித் தன் மனதில் ஒருவிதத் தீர்மானத்தைக் கொள்ள முருகப் பனுக்குப் போதுமான அவகாசமிருந்தது. அந்த வீடிருந்த சிறு தீவு கரடு முரடும், உயரமும் பயங்கரமு மானது. அதில் மூன்று குன்றுகள் இருக்கின்றன. அதா

வது மூன்று சிகரங்களையுடைய ஒருபெரிய மலையெனலாம். அதன் சிகரங்களிலிருந்து கடல் வரையில் கானுறுகளும், பள்ளத்தாக்குகளும், பிளவுகளும் நிறைந்திருக்கின்றன. அச்சிகரங்கள் பாறைகளாக மனிதர் ஏறிச்செல்ல முடியாத அவ்வளவு உயரமுடையவைகள். அங்கு கழுகுகளும், கூளிகளும் கூண்டு கட்டிக்கொண்டிருக்கின்றன. அத்தீவின் பூமி புற் பூண்டுகள் நிறைந்து ஈரமும் குளிருமுடையதாய்ச் சாகுபடிக்கு உதவாததாய் இருந்தது. ஆனல் ஆற்றோரங்களில் மட்டும் சில பழந்தரும் விருக்ஷங்கள் இருந்தன. அவைகளும் செடிகளே யென்று கூறுமாறு அவ்வளவு குட்டையாகவே வளர்ந்திருந்தன.

முருகப்பன் தேகம் சற்று சுகமடைந்ததே அவன் கடலோரத்தில் உலவ மிக்க விருப்ப முடையவனயிருந்தான். அந்த இடம் மிக்க ஆரோக்கியமாகவும் அழகான காட்சிகளை யுடையதாகவு மிருந்தது. கடலிலிருந்து ஒரு அகன்ற கழி தீவின் பாதி தூரம் வரையில் உள்ளே சென்றிருந்தது. அதன் மத்தியில் ஒரு அழகிய சிறு தீவிருந்தது. தூரத்தில் உள்ள சிறு நகர் என்ற துறை முக நகரம் அங்கிருந்து பார்த்தால் நன்ருகத் தெரிந்தது. அதன் துறைமுகம் மிக்க வசதியானதாகையால் எப்போதும் அனேகம் கப்பல்களையும் படகுகளையும் அங்கு காணலாம்.

முருகப்பனுடைய மனதில் தன்னைப்பற்றிய பலவிதமான எண்ணங்கள் குழப்பம் செய்துகொண் டிருந்தாலும் அவன் நெடுநேரம் கடற்கரையில் உலவிக்கொண்டிருப்பான். தான் பிரயாணம் செய்வதற்குப் போதுமான தேக சுகம் உண்டானதே அங்கிருந்து புறப்பட்டு விடவேண்டுமென்று அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

ஆனல் பிரயாணத்திற்கு வேண்டிய வசதிகள் அவனுக்குக் கிடைத்தபோதிலும் நாகம்மாள் தனக்குப் பிரியம் வந்தாலன்றி அவனைச் செல்லவிடமாட்டாள். அவன் மிக்க தந்திரமாய் அவளிடம் ஒரு வாக்குத்தத்தம் பெற்றுக்கொண்டான். அதாவது அவள் இஷ்டப்படி தான் நடப்பதாயின் ஆரல் தீவில் சந்தைத் திருவிழா நடக்கும்போது அவளே அவனை யங்கழைத்துச் செல்லவேண்டு மென்பதே.

51—வது அத்தியாயம்.

குறுக்குத் துறை நகரத்திலிருந்து ஜெயகோஷத்தோடு கப்பலுக்குக் குலசேகரன் கொண்டுபோகப் பட்டதும், கப்பலிலிருந்த ஆட்களில் பெரும்பாலார் அவனுக்கு நல்வரவுகூறி அவன் கரங்களைப்பற்றிக் குலுக்கி ஆரவாரம் செய்தார்கள். கடற்கொள்ளைக்காரரில் கப்பித்தானுக்கு யாவரும் அடங்கி நடந்தாலும் சாதாரணமான எல்லாவிஷயங்களிலும் யாவரும் சமமரியாதையோடேயே நடக்க விரும்புவார்கள்.

குலசேகரனுக்கு நல்வரவு கூறி யவர்கள், அவன் திரும்பித் தங்களிடம் வந்து சேர்ந்ததற்காகத் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டபின் அவனை, தற்சமயம் கப்பித்தானக விருக்கும் கோபாலன் உட்கார்ந்திருக்கும் மேல் தட்டிற் கழைத்துக்தகாண்டு போனர்கள். அங்கு கோபாலன் இவர்கள் குலசேகரனுக்கு நல்வரவு கூறுவதை அதிருப்தியோடும் வெறுப்போடும் கேட்டுக்கொண்டிருக்கிருன்.

கோபாலனுக்கு வயது நாற்பதிலிருந்து ஐம்பதுவரையிலிருக்கும். நடுத்தரமான உயரமுடையவன். ஆனல்

நல்ல பலம் பொருந்திய தேகமுடையவன். கறுத்த உரோமமும் தடித்த கழுத்தும் உடையவன். அவனுடைய விகாரம் பொருந்தியதும் குரூரத்தன்மையும் பயங்கரமும் பொருந்தியதுமான முகத்திற்கும், பெருந்தன்மையும் கம்பீரப் பிரகாசமுமுடைய குலசேகரன் முகத்திற்கும் நேர் மாறான வித்தியாசம் தோன்றியது. இரண்டு கப்பித்தான்களும் ஒருவர் முகத்தை யொருவர் சற்றுநேரம் உற்றுநோக்கினார்கள். அவரவர்கள் மேல் பிரியமுள்ளவர்கள் அவரவர்களைச் சூழ்ந்து நின்றார்கள். பொன்னுசாமி அல்லது அனந்தன் என்பவனைத் தலைவனாகக்கொண்ட ஆட்களெல்லாம் குலசேகரன்மேல் அன்புடையவர்கள்.

கோபாலன் கடைசியில் பேசத்தொடங்கி, "காப்டென் குலசேகரன்! இக்கப்பலுக்கு வந்ததற்கு உனக்கு நல் வரவு கூறுகிறேன். இன்னும் நீயே கப்பித்தான் என்று கருதிக்கொண்டிருக்கிறாய் போலும். ஆனால் அக்காலம் போய்விட்டது. உன் வசத்திலிருந்த கப்பலை நீ யிழந்துவிட்டபோதே அது போய்விட்டது" என்றான்.

குலசேகரன்:—"அத்தகைய பதவியை யடைய எனக்குப் பிரியமில்லை; அதையளித்தாலும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நீ யென்னைத் தூரத்திலுள்ள ஒருதீவில் இறக்கிவிட்டால் அதுவே போதும்; கப்பித்தானாக இருக்கவாவது, உன் அதிகாரத்தின் கீழ் இக் கப்பலில் உத்தியோகம் செய்யவாவது எனக்குச் சற்றேனும் விருப்பமில்லை" என்றான்.

கோபாலன்:—"சகோதரனே! என் அதிகாரத்தின் கீழ் இருக்க ஏன் விருப்பமில்லை? நீ யவ்வளவு அதிக உயர்வானவனா? உன்னைவிட வயதில் முதிர்ந்தவர்களும் இத்தொழிலில் சாமார்த்திய முடையவர்களுமாகிய

மாலுமிகள் என் அதிகாரத்தின் கீழ் இருக்கையில் நீ யேன் இருக்கலாகாதோ?'' என்றான்.

குலசேகரன் புன்னகையோடு "உன்னிடமிருக்கும் அனுபோகசாலிகளும் கெட்டிக்காரருமாகிய ஆட்களில் யார் அதோ தெரியும் இவ்வூர் கோட்டையிலிருக்கும் பீரங்கி வாய்களுக்கு நேராக இக் கப்பலை நிறுத்திவைத் தார்களோ தெரியவில்லை. நகர அதிகாரிகள் கருதினால் நீ எச்சரிக்கையடைந்து உன் கப்பலை யிங்கிருந்து நகரச்செய் வதற்குள் அதைப் பொடிப்பொடியாகப் பறக்கச்செய்து விடலாகும். அத்தகைய வயது முதிர்ந்தவர்களும் மிக்க கெட்டிக்காரருமாகிய ஆட்களிடம் வேலைசெய்யும் பாக்கி யம் எனக்குக் கிடைப்பதாயினும் என்னை மன்னிக்க வேண்டும். அவ்வளவே நான் கூறுவது'' என்றான்.

அச்சுதன் என்பவன் "நீங்களிருவரும் பைத்தியக்கார ரென்றே நான் நினைக்கிறேன். வேறு நல்லவேலை யில்லாத பட்சத்தில் துப்பாக்கி அல்லது உடைவாளை யேந்தி விளை யாடுவது நல்ல வேடிக்கையாக விருக்குமென்று எண்ணு கிறேன். இச்சமயத்தில் நமக்குள் சச்சரவிட்டுக்கொண் டால் இவ்வூரார் இதுதான் சமயமென்று நம்மனைவரையும் ஒரு மூச்சில் ஒழித்துவிடுவார்களே'' என்றான்.

இன்னொரு கப்பல் உத்தியோகஸ்தன் "நன்கு கூறினை அச்சுதனே. இந்த இரண்டு காப்டென்களும் ஒருமித்து ஒரு மனதாய் நடந்து கொள்ளாவிட்டால் என் இருவரை யும் நீக்கிவிட்டு மூன்றுவது ஒருவரைக் கப்பித்தானக நிய மித்து விடுவதே நலம்'' என்றான்.

அனந்தன்:—உன்னையே ஏற்படுத்தலாமாக்கும். ஆனால் அந்தப் பருப்புவேகாது. பெரியமனிதத் தன்மை யுடையவர்களை யாள்கிறவன் தானும்பெரியமனிதனக

விருக்கவேண்டும். என்வரையில் தக்க யோக்கியதை யும் தைரியமும் மற்ற குணங்களுமுடைய காப்டென் குலசேகரனே நம் தலைவனுக விருக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

முன்பேசிய மதனின்:—"ஒகோ! நீ ஒரு பெரியமனித னென்று எண்ணிக்கொண்டாயோ. அப்படியாயின் வண்டிக்காரனும் பெரியமனிதன்ருன்" என்ருன்.

இம்மொழிகளைக்கேட்டதே அனந்தனுக்கு அடங்காக் கோபம் வந்து தன் உடைவாளை உருவத்தொடங்கினுன். அதற்குள் கப்பலின், தச்சர்கள் தலைவன் உடனே தன் கையிலிருந்த வாட்சியை யுயரத்தூக்கிக்கொண்டு "உங் களில் யார் முதலில் அத்துமீறி நடக்கமுயல்கிருர்களோ அவர்கள் மண்டையைப் பிளந்துவிடுவேன். நமது சட்டப் படி யாரேனும் இருவர் சண்டையிடப் பிரியப்பட்டால் அவர் கரைக்குச் சென்று சண்டையிடவேண்டும்" என்று இருவரையும் அடக்கினுன்.

காப்டென் கோபாலன் மனச்சோர்வோடு "எனக்கு யாரோடும் சச்சரவில்லை. காப்டென் குலசேகரன் இத்தீவு களில் உலவிக்கொண்டு சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தான். நாம் வீணுக அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்து நமது காலத்தையும் கையிலிருந்த பொரு ளையும் வியர்த்தம் செய்தோம். அப்படிக் கின்றேல் இது காறும் எங்கேனும் இருபது அல்லது முப்பதினுயிரம் பவுன்கள் நமது கையிருப்பில் சேர்த்திருக்கலாம்; நீங்க ளனைவரும் எப்படி ஏற்பாடு செய்கிறீர்களோ அதன்படி நடக்க நான் சித்தமாயிருக்கிறேன்" என்ருன்.

ஒருகப்பலின் கப்பித்தானுடைய அதிகாரம் எல்லையற் றது; மற்ற எல்லா ஆட்களும் அவன் கட்டளைப்படி யுடனே

நடக்கவேண்டும். காரணம் கேட்கவாவது மறுத்துக் கூறவாவது கூடாது. அவனுக்கு அத்தகைய அதிகாரமில்லாவிடின் ஒரு சமயத்தில் கப்பலுக்கும் அதிலுள்ள உயிர்களுக்கும் ஆபத்தாய்முடியும். ஒருபிரயாணி களவு, சச்சரவு முதலிய குற்றங்களைச்செய்துவிட்டால் கப்பித்தான் உடனே அவனைச் சிறைசெய்து ஒரு துறைமுகம் சேர்ந்தபோது அங்குள்ள நியாயாதிபதியிடம் அவனை யொப்பித்துக் குற்றத்தை ருசுப்படுத்த வேண்டியது அவன் கடமை, அவ்வளவு அதிகாரம் அவனுக் கில்லாவிட்டால் நடுக்கடலில் செல்லும்போது, ஒரு சிறு ஊர்போன்ற கப்பலில் அரசனில்லா ஊர்போல் விவகாரங்கள் நிகழ்ந்து கப்பலுக்கும் அதிலுள்ளவர்களுக்கும் அழிவு நேரிடும்.

ஆனல் கள்ளக் கப்பலிலோ சட்டங்கள் வேறு. அதிலும் கப்பித்தானுக்குப் பூரண அதிகாரமிருந்தாலும் அது ஒரு குடியரசுபோன்றது. அதிலுள்ள ஆட்களெல்லாம் ஒன்றுசேர்ந்து அபிப்பிராயப்பட்டால் இருக்கிற கப்பித்தானை நீக்கிவிட்டுத் தங்களுக்குள் ஒருவனைக் கப்பித்தானுகை நியமிக்கலாம். கப்பித்தான் அக்கிரமம் செய்தால் அவனுக்கு மரணதண்டனை கூட விதித்து விடலாம். அம்மாதிரி அவர்களுக்குள் நிபந்தனைகளுண்டு. அதனுற்றான் காப்டென் கோபாலன் பெரும்பாலர் குலசேகரன் பட்சத்தில் இருக்கிறார்கள் என்பதை யறிந்ததே உங்கள் ஏற்பாட்டின்படிச் சம்மதிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறினன்.

அதற்குள் இன்னெரு கப்பல் உத்தியோகஸ்தன் "நமது சட்ட நிபந்தனைகளின்படி இத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் சபைகூடி என்ன செய்யவேண்டு மென்பதைத் தீர்மானிக்க வேண்டும்" என்றுன். அவன் பிரேரேபித்த விஷயத்தை யாவரும் ஒப்புக் கொண்டார்கள். இத்தகைய சமயத்தில் அவர்களில் ஒவ்வொருவருக்கும் சம

மான வாக்குச் சுதந்தரமுண்டு. அதனல் யாவரும் சந்தோஷமாய் அந்த ஏற்பாட்டை யாதரித்தார்கள். மேலும் அவ்வாறு சபைகூடும்போது யாவர்க்கும் சாராயம் தாராளமாகக் கொடுக்கப்படும். அவரவர் இஷ்டப்படி குடிக்கலாம். அது அவர்களுக்குச் சபைகூட ஒரு தூண்டுதலாக விருந்தது. அக்கூட்டத்திலும் எப்போதும் நிதானமாகவே குடித்து நடக்கும் விஷயங்களைச் சரியான புத்தியோடு சிந்திப்பவர்கள் சிலர் இருந்தார்கள். அத்தகைய சமயங்களில் உண்மையில் அவர்களே இனி நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றிய தீர்மானங்களைச் செய்வோர்கள். வெறிக்கக் குடித்து நடப்பது என்னவிஷயமென்று உணரக்கூடாத மற்றபேரும், மறுநாள் வெறிதெளிந்து எழுந்தபின் தாங்களும் யாவும் உணர்ந்து அத்தீர்மானங்களை யொப்புக்கொண்டவர்கள் போலவே அதன்படி நடந்துகொள்வார்கள்.

இப்போது நிகழ்ந்த சம்பவத்தில் பெரும்பாலர் அளவுமீறி யதிகமாகக் குடித்துவிட்டு வாய்க்குவந்தபடி உளறத் தொடங்கினர்கள். அவர்களில் காப்டென் கோபாலே யாவரிலும் அதிகமாகக் குடித்து விட்டான். ஆகையால் அவன் பட்சத்தி லிருந்தவர்களே “ காப்டென் கோபாலன், குலசேகரன் திரும்பிவந்ததால் தன் மனதிலுண்டான வியாகூலத்தை மறக்கும் நோக்கங்கொண்டு அளவுமீறிக் குடித்து அறிவிழந்து விட்டான். இது நமது சட்டத்தின் நிபந்தனைகளுக்கு முற்றும் விரோதமான நடக்கை ” என்று கூறினர்கள்.

குலசேகரன் முதலில் பேசத்தொடங்கி, “ நண்பர்களே ! இக்கப்பலின் தலைமை யதிகாரியாக வேண்டுமென்ற விருப்பம் எனக்கில்லை. ஆகையால் இவ்விஷயத்தில் ஒருவர் தயவும் எனக்கு வேண்டியதில்லை. என்னைக் கொண்டு

போய்த் தூரத்திலுள்ள ஒருதீவில் என்வரையில் எப்படியேனும் சமாளித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டால் அதுவே நீங்கள் செய்யும் பெரிய உதவியாகும்'' என்ருன்.

முன்பேசிய உத்தியோகஸ்தன் அவன் கூறியதை யடியோடு ஆட்சேபித்து. "இது நடவாதகாரியம். இங்குள்ள ஆட்களெல்லாம் குலசேகரனை நன்ருயறிவார்கள். அவனுடைய கப்பலோட்டும் திறமையில் யாவருக்கும் பூரண நம்பிக்கையுண்டு. அவன் எப்போதும் அளவோடு குடித்து, புயற்காற்று முதலிய ஆபத்து காலங்களில் கப்பலைச் சரியாக நடத்தவும், எதிரிகள் வந்தால் முன்யோசனையோடு யுத்தம் செய்யவும் ஆயத்தமாகவே யிருப்பான். ஆகையால் அவன் இருக்கும்போது எச்சமயத்திலும் கப்பல் தன்னைப் பாதுகாக்க ஆளில்லாமலிராது. நமது காப்டென் கோபாலனே தைரியமான கல்மன முடையவனே. அவ்விஷயத்தில் நான் உறுதியாய் அவன்பக்கம் பேசுவேன் - ஆனல் குடித்துவிட்டாலோ அவன் சகவாசத்தில் நாம் இருக்கச் சற்றும் தகுதியாயிராது. ஒருநாள் இரவு வீணுக வேடிக்கைக்காகக் கப்பலை ஒரு பாறைமேல் மோதச்செய்ய விருந்தான் என்பது உங்களனைவர்க்கும் நன்ருக நினைவிருக்குமென்றே நம்புகிறேன். ஒருநாள் நாம் சபைகூடிப் பேசுகையில் குடிவெறியால் தன் எதிரிலிருந்த ஜக்கன் முழங்காலில் துப்பாக்கியால் சுட்டுவிட்டது யாவர்க்கும் எப்போதும் நினைவிருக்கு மல்லவா?....'' என்ருன்.

தச்சர்களின் தலைவன் "ஏன்? நான்ருன் சமயோசிதப்படி அவன் காலை முழங்கால் வரை இரம்பத்தாலறுத்து விட்டு இரணத்தைக் கட்டு சுகப்படுத்தி ஒரு நேர்த்தியான பொய்க்காலும் செய்து கொடுத்தேன்'' என்ருன்.

புதிய நாவல் — பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் போவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவராதது ; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது ; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிகீகாம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிகாத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசாலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், 'ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச ஏேஸ்திரி வீதி, ஸௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.